# அஹ்லுல் பைத் மீதான நேசம்

## நான்காவது மின்னல்

இந்த ரஸாஇலிற்குப் பொருத்தமாக, ‘‘மின்ஹாஜுஃஸ் ஸுஃன்னத் - சுன்னத்தின் பாதை’’ என்ற கருப்பொருள் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

(இமாமத் விடயமானது அடிப்படைகளோடு சம்பந்தப்படாத விடயமாயினும் பிற்காலத்தில் அளவுக்கதிகம் முக்கியத்துவம் அளிக்கப்பட்டதன் காரணமாக ஈமானிய அடிப்படைகளின் வரிசைக்குள் நுழைந்து இல்முல் கலாம் மற்றும் உஸுஃலுத்தீன் பகுதிகளில் மிகவும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டு நோக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாகவும் குர்ஆனிற்கும் ஈமானிற்கும் சொந்தமான எமது அடிப்படைப் பணியோடு தொடர்புகள் இருக்கின்ற காரணத்தினாலும் அதுகுறித்து இங்கு ஓரளவு விளக்கப்படுகிறது.

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ

لَقَدْ جَاءَكُمْ رَسُولٌ مِنْ اَنْفُسِكُمْ عَزِيزٌ عَلَيْهِ مَا عَنِتُّمْ حَرِيصٌ عَلَيْكُمْ بِالْمُؤْمِنِينَ رَؤُفٌ رَحِيم * فَاِنْ تَوَلَّوْا فَقُلْ حَسْبِىَ اللّٰهُ لاَ اِلٰهَ اِلاَّ هُوَ عَلَيْهِ تَوَكَّلْتُ وَهُوَ رَبُّ الْعَرْشِ الْعَظِيمٌ * قُلْ لاَ اَسْئَلُكُمْ عَلَيْهِ اَجْرًا اِلاَّ الْمَوَدَّةَ فِى الْقُرْبٰى [1]

மேற்படி மகத்துவமிக்க வசனங்களில் பொதிந்துள்ள ஏராளமான உன்னதச் சத்தியங்களிலிருந்து ஓரிரு சத்தியங்கள் இரண்டு அத்தியாயங்களில் விளக்கத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## முதலாவது அத்தியாயம் ‘‘நான்கு குறிப்புக்களாகும்’’

### முதலாவது குறிப்பு

இந்த வசனங்கள் ரஸுஃலே அக்ரம் அலைஹிஸ்ஸலாது வஸ்ஸலாம் அவர்கள் தமது உம்மத் மீது கொண்டிருக்கின்ற பரிபூரணத்துவமிக்க அன்பையும் காருண்யத்தையும் பிரஸ்தாபிக்கின்றன. ஆம். ஸஹீஹான அறிவிப்புக்களின்படி மஹ்ஷருடைய பயங்கரத்தின் காரணமாக அனைவரும், ஏன், நபிமார்களும் கூட ‘‘ந.்.ப்ஸீ’’, ‘‘ந.்.ப்ஸீ’’ என்று கூறும் போது, ரஸுஃலே அக்ரம் அலைஹிஸ்ஸலாது வஸ்ஸலாம் அவர்கள் ‘‘உம்மதீ’’, ‘‘உம்மதீ’’ என்று கூறுவதனூடாக உம்மத்தின் மீதான தனது அன்பையும் கருணையையும் வெளிக்காட்டுவார்கள். அதே போன்றே, அஹ்லுல் கஷ்.்.புடைய உண்மைப்படுத்தலுக்கிணங்க, அன்று பிறந்த பாலகனாக தனது தாயின் மடியில் இருக்கின்ற போதே தாயார் அன்னாருடைய முனகலில் ‘‘உம்மதீ’’, ‘‘உம்மதீ’’ என்று[2] கூறப்படுவதைச் செவிமடுத்துள்ளார்கள். மேலும், அண்ணலவர்களின் ஒட்டுமொத்த வாழ்க்கையும் அந்த வாழ்க்கையில் அன்னார் எடுத்தொழுகிய அன்பு பிரவாகிக்கும் அழகிய பண்பாடுகளும் அன்னாரது அன்பினதும் கருணையினதும்

---

[1]: முறையே, அத்தவ்பா, 128-129 அஷ்ஃஅரா, 23

[2]: பார்க்க வேண்டிய நூல்கள், ஸுஃயூதி, அல்-ஹஸாஇஸுஃல் குப்ரா, 1: 80, 85, 91 அன்நப்ஹானி, ஹுஃஜ்ஜதுல்லாஹி அலல் ஆலமீன்: 224, 227-228

பரிபூரணத்தன்மையை வெளிக்காட்டுவதாக அமைந்துள்ளன. அவ்வாறே, தனது உம்மத் தன் மீது எண்ணற்ற ஸலவாத்துக்களை சொல்ல வேண்டும் என்பதற்கான எல்லையற்றதொரு தேவையை வெளிப்படுத்துவதனூடாக உம்மத்துடைய ஒட்டுமொத்த நிம்மதி மற்றும் சந்தோச நிலைமைகளிலும் தானும் உம்மத்தோடு தொடர்பு பட்டிருக்கின்ற உண்மையை வெளிக்காட்டி இதன் மூலமாக உண்மையிலேயே தனது எல்லையற்ற அன்பையும் கருணையையும் பறைசாற்றுகின்றார்கள். ஆம், இந்த அளவு எம்மீது அன்பும் கருணையும் கொண்ட ஒரு வழிகாட்டியின் உன்னத வழிகாட்டல்களான மேலான சுன்னத்களிற்கு அமைவாக செயற்படாதிருப்பது, எப்படிப்பட்டதொரு நன்றி கெட்டத்தனம் என்பதை எண்ணிப் பார்த்துக் கொள்ளுங்கள்.

### இரண்டாவது குறிப்பு

ரஸுலே அக்ரம் அலைஹிஸ்ஸலாது வஸ்ஸலாம் அவர்கள், விசாலமானதும் அகிலார்ந்ததுமான நுபுவ்வத் பணியை சுமந்தவர்களாக இருக்க, ஒப்பீட்டளவில் முக்கியத்துவம் குறைந்த தனிப்பட்ட நபர்கள் மீது அளப்பரியதோர் அன்பை வெளிப்படுத்தியிருக்கின்றார்கள். உண்மையில், பார்வைக்கு அப்படிப்பட்ட உன்னதமானதோர் அன்பையும் இரக்கத்தையும் தனி நபர்கள் மீது செலுத்துவதானது நுபுவ்வத் பணியுடைய அளவிட முடியாத முக்கியத்துவத்திற்கு முன்னால் பொருத்தமற்றதாகத் தென்படுகின்றது. என்றாலும், நிதர்சனத்தில் அந்தத் தனி நபர்கள் விசாலமானதும் அகிலார்ந்த்துமான அந்த நுபுவ்வத்துடைய பணிக்கு அர்ப்பணமாகக் கூடியதொரு சங்கிலித் தொடரின் தொடக்க முனையாகவும் அந்தச் சங்கிலித் தொடரைப் பிரதிநிதித்துவப்படுத்துவோராகவும் இருந்தமையால் அந்த உன்னத சங்கிலித் தொடரின் முக்கியத்துவத்தைக் கருத்திற் கொண்டு அதன் ஆரம்பப் பிரதிநிதி ஆகிய அந்தத் தனி நபர்களுக்கு அதி உச்ச மட்ட முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக, ரஸுலே அக்ரம் அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாம் அவர்கள் ஹழரத் ஹஸன் மற்றும் ஹுஸைன் அவர்கள் மீது அவர்களின் பால்ய வயதிலிருந்தே வெளிக்காட்டிய மிதமிஞ்சிய அன்பும் முக்கியத்துவமும், வெறுமனே இரக்க சுபாவத்தினாலோ அல்லது உறவு முறை உணர்வினாலோ வெளிப்பட்ட ஓர் அன்பு அன்றி, அது அவர்கள் நுபுவ்வத்துடைய பணிக்கு அர்ப்பணமாகக் கூடிய ஒளிமயமான ஒரு சங்கிலித்தொடரின் ஒரு முனையாகவும் நபியுடைய வாரிசாக வர இருக்கின்ற மிகவும் மகத்துவம் பொருந்திய ஒரு ஜமாத்துடைய ஊற்றுக்கண்களாகவும் பிரதிநிதிகளாகவும் சாரமாகவும் இருந்த காரணத்தினால் வெளிப்பட்ட அன்பாகும். ஆம்! ரஸுலே அக்ரம் அலைஹிஸ்ஸலாது வஸ்ஸலாம் அவர்கள் தனது மாசற்ற கருணையின் வெளிப்பாடாக ஹழரத் ஹஸன் (ரழி) அவர்களைத் தனது கைகளில் சுமந்து ஆரத்தழுவி நெற்றிதனில் முத்தமிடும் போது, ஹழரத் ஹஸன் (ரழி) அவர்களிலிருந்து சங்கிலிப் பிணைப்பெடுக்கும் பாக்கியம் பெற்ற பரம்பரையிலிருந்துமுள்ள கௌஸுல் அ.்.லம் ஷாஹ் ஜைலானி போன்ற மஹ்திக்கு ஒப்பான நபியுடைய வாரிசுகள் மற்றும் ஷரீஅதே அஹமதிய்யாவை தம் முதுகுகளில் சுமந்து பாதுகாக்கப் புறப்பட்ட உத்தமர்கள் என்று அனைவரது பங்கிற்கும் சேர்த்தே அன்னாரது நெற்றியை முத்தமிட்டுள்ளார்கள். அதாவது, அந்த உத்தமர்கள் எதிர்காலத்தில் ஆற்ற இருக்கும் மகத்தான பணிகளைத் தனது நுபுவ்வத் கண்களால் கண்டு ஆனந்தமும் பரவசமும் அடைந்துள்ளார்கள். அந்த ஆனந்தத்தினதும் பரவசத்தினதும் வெளிப்பாடாக அவர்களைத் தட்டிக் கொடுத்து ஆர்வமூட்டுவதற்கான ஒரு சமிக்ஞையாக அந்த அனைவரது பங்கிற்கும் சேர்த்து ஹழரத் ஹஸன் (ரழி) அவர்களின் நெற்றிதனில் முத்தமிட்டுள்ளார்கள். அதே போன்றே, ஹழரத் ஹுஸைன் (ரழி) அவர்கள் மீது வெளிக்காட்டிய அதீத ஈடுபாடும் இரக்கமுமானது ஹழரத் ஹுஸைன் (ரழி) அவர்களின் பிரகாசமான பரம்பரையில் தோன்றிய ஜைனுல் ஆப்தீன், ஜா.்.பர் ஸாதிக் போன்ற உன்னதமான இமாம்கள் மற்றும் நபியுடைய உண்மையான வாரிசுகளாகிய மஹ்தியை ஒத்த ஏராளமான உத்தமர்கள் ஆகியோரின் பெயராலுமாகும். அதாவது, இஸ்லாத்தினதும் ரிஸாலத்

பணியினதும் பெயரால் அன்னவர்களின் நெற்றியை முத்தமிட்டுத் தனது மாசற்ற நேசத்தையும் ஈடுபாட்டையும் வெளிக்காட்டியுள்ளார்கள்.

ஆம், உத்தமத் தூதர் ஹழரத் ரஸுலே அக்ரம் அலைஹிஸ்ஸலாது வஸ்ஸலாம் அவர்களது காலத்தை விஞ்சிய பிரகாசமான கண்கள் அராபியப் பாலை வெளியிலிருந்து, முடிவிலியாக வியாபித்துள்ள நித்திய உலகத்தின் ஓர் ஓரத்தில் இருக்கும் மஹ்ஷர் வெளியைத் தரிசித்த கண்களாகும். மண்ணுலகிலிருந்து கொண்டே சுவனலோகத்தைக் கண்டு களித்த கண்களாகும். பூமியிலிருந்து கொண்டே விண்ணுலகிலிருக்கும் மலக்குமார்களோடு சம்பாஷணை செய்த கண்களாகும். மேலும், ஆதம் அலைஹிஸ்ஸலாமுடைய காலம் முதல் இறந்த காலத்தின் இருண்ட திரைகளுக்குப் பின்னால் மறைந்து கொண்ட நிகழ்வுகளைத் தெளிவாகக் கண்டு கொண்ட கண்களாகும். அனைத்திற்கும் மேலால் அந்த ‘பரக்கத்’ பொருந்திய கண்கள் சர்வ மாட்சிமை மிக்க வல்லோன் அல்லாஹ்வைக் காண்கின்ற பாக்கியத்தைப் பெற்ற கண்களாகும். ஆம்! இப்படிப்பட்ட நபியவர்கள் தனது காலத்தை விஞ்சிய பிரகாசமான அந்தக் கண்களாலும் மறைவை அறிந்த உள்ளத்தாலும் நிச்சயமாக ஹழரத் ஹஸன் மற்றும் ஹுஸைன் (ரழி) அவர்களிற்குப் பின்னால் அவர்களது வழித்தோன்றல்களில் வர இருக்கும் வாரிசுகளையும் குதுப்மார்களையும் இமாம்களையும் முஜத்திதுகளையும் கண்டுள்ளார்கள். அவர்கள் அனைவரது பெயராலும் இவர்களின் நெற்றிகளை முத்தமிட்டுள்ளார்கள். ஆம்! நபியவர்கள் ஹழரத் ஹஸன் (ரழி) அவர்களது நெற்றியில் இட்ட முத்தத்தில், ஷாஹ் ஜைலானி அவர்களுக்கு உன்னதமானதொரு பங்கு இருக்கின்றது.

## மூன்றாவது குறிப்பு

اِلاَّ الْمَوَدَّةَ فِى الْقُرْبَى என்ற மறை வசனத்தின் ஓர் ஏற்றுக்கொள்ளப்பட்ட அர்த்தம், “ரஸுலே அக்ரம் அலைஹிஸ்ஸலாது வஸ்ஸலாம் அவர்கள் தனது ரிஸாலத் பணியை நிறைவேற்றியதற்குப் பகரமாகக் கூலி வேண்ட மாட்டார்கள், தனியாக, அஹ்லுல் பைத் மீதான தோழமையையும் நேசத்தையும் வேண்டுவார்கள்” என்பதாகும். ஒருவேளை, பின்வருமாறு கேட்கப்பட்டால்: இந்த அர்த்தத்திற்கமைய பரம்பரை உறவுமுறை நெருக்கத்திலிருந்து தோன்றும் ஒரு பிரதிபலன் நாடப்பட்டுள்ளதல்லவா! ஆனால், اِنَّ اَكْرَمَكُمْ عِنْدَ اللّٰهِ اَتْقَيكُمْ[3] என்ற மறை வசனத்தின் தெளிவிற்கிணங்க, பரம்பரை உறவிலிருந்தன்றி அல்லாஹ்வுடனான நெருக்கத்தின் அடிப்படையில் அல்லவா ரிஸாலத் பணி உருண்டோடுகின்றது?

**பதில்:** ரஸுலே அக்ரம் அலைஹிஸ்ஸலாது வஸ்ஸலாம் அவர்கள், ஆலுபைத் இஸ்லாமிய உலகெங்கும் கிளைபரப்பப் போகும் ஒளிமயமானதொரு விருட்சமாக ஆகப்போவதையும் இஸ்லாமிய உலகின் அனைத்து மட்டங்களிலும் மனிதனைப் புனிதனாக மாற்றுவதற்கான கல்வியில் வழிகாட்டிகளாகவும் முர்ஷித்களாகவும் பணிபுரியப் போகும் உத்தமர்களில், அதிகமானவர்கள் ஆலுபைத்திலிருந்தே தோன்றப் போகின்றார்கள் என்பதையும், மறைவை அறிந்ததும் காலத்தை விஞ்சியதுமான தனது நுபுவ்வத் பார்வையால் கண்டு கொண்டுள்ளார்கள். அவ்வாறே அத்தஹிய்யாத்தில் உம்மத் தனது குடும்பத்தினர் சம்பந்தமாகக் கேட்கும் اَللّٰهُمَّ صَلِّ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَ عَلَى آلِ سَيِّدِنَا مُحَمَّدٍ * كَمَا صَلَّيْتَ عَلَى اِبْرَاهِيمَ وَ عَلَى آلِ اِبْرَاهِيمَ اِنَّكَ حَمِيدٌ مَجِيدٌ என்ற துஆ ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும் கண்டு கொண்டுள்ளார்கள். அதாவது, இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுடைய உம்மத்தில் தோன்றிய பிரகாசமான வழிகாட்டிகளில் அதிகமானவர்கள் ஹழரத் இப்ராஹீம் (அலை) அவர்களுடைய

---

[3]: அல்ஹுஜுராத், 13

பரம்பரையிலிருந்து தோன்றிய பனூ இஸ்ராஈலைச் சேர்ந்த நபிமார்களாகவே இருந்தார்கள். அவ்வாறே, தனது உம்மத்திலும் கூட இஸ்லாத்திற்கான உன்னதப் பணிகளிலும் பெரும்பாலான தரீக்களிலும் ஆலுபைத்தைச் சேர்ந்த அக்தாப்கள் முன்னிற்பதைக் கண்டுள்ளார்கள். இதன் காரணமாகவே قُلْ لاَ اَسْئَلُكُمْ عَلَيْهِ اَجْرًا اِلاَّ الْمَوَدَّةَ فِى الْقُرْبَى என்ற மறை வசனம் தனக்கிட்ட கட்டளைக்கமைய, ஆலுபைத்திற்காக தனது உம்மத்தின் தோழமையையும் நேசத்தையும் வேண்டினார்கள். இந்த உண்மையைப் பிறிதொரு அறிவிப்பினூடாகவும் வலியுறுத்துகின்றார்கள். ''உங்களிடம் இரண்டு விடயங்களை விட்டுச் செல்கிறேன், அவற்றைப் பற்றிக் கொள்கின்ற காலமெல்லாம் விமோசனம் அடைவீர்கள். ஒன்று: கிதாபுல்லாஹ், மற்றது: எனது ஆலுபைத்.''[4] ஏனெனில், மேலான சுன்னத்களின் தோற்றுவாயாகவும், அவற்றின் பாதுகாவலர்களாகவும், அனைத்துக் கோணங்களிலிருந்தும் அந்த சுன்னத்களிற்குச் சார்பானவர்களாகவும் அவர்களே இருக்கின்றார்கள்.

ஆம்! இந்த இரகசியத்தின் காரணமாகத் தான், குர்ஆன், சுன்னத்திற்குக் கட்டுப்படுமாறு ஏவுவதற்கு ஒத்த அந்தஸ்தைக் கொண்டதாக மேற்படி ஹதீஸிலுள்ள உண்மை அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் அர்த்தமானது, ஆலுபைத்திடமிருந்து ரிஸாலத் பணியினூடாக எதிர்பார்க்கப்படுவது, நபியுடைய மேலான சுன்னத்களாகும். சுன்னத் வழிப்படி நடவாது புறக்கணிப்பவன், உண்மையான ஆலுபைத்தைச் சேர்ந்தவனாக ஆக முடியாததைப் போன்றே, ஆலு பைத்துடன் உண்மைத் தோழமை கொள்ளவும் முடியாது.

மேலும், நபி (ஸல்) அவர்கள் தனது உம்மத்தை ஆலுபைத்தைச் சூழ ஒன்று திரட்ட விருப்பப்பட்டதற்குப் பின்னாலுள்ள இரகசியம் என்னவெனில், காலவோட்டத்தில் ஆலுபைத் மிகவும் பல்கிப் பெருகப் போவதையும், அதேநேரம் இஸ்லாமிய உலகம் மிகவும் பலவீனப்படப் போவதையும் ''பி'இதினில்லாஹ் - அல்லாஹ்வின் அனுமதியைக் கொண்டு'' அறிந்து கொண்டார்கள். ஆக, இப்படிப்பட்ட ஒரு காலத்தில் அந்த உம்மத்துடைய ஆன்மீக மேம்பாட்டிற்கான காரணிகளாகவும் மத்தியஸ்தலங்களாகவும் இருப்பதற்காக ஆன்ம பலத்திலும் ஆளணியிலும் சக்தி வாய்ந்த பரஸ்பரம் ஒத்துழைக்கக் கூடிய ஒரு ஜமாத்துடைய இருப்பு அவசியப்படுகின்றது. இந்தச் சூழ்நிலையை அல்லாஹ்வின் அனுமதியைக் கொண்டு சிந்தித்த நபியவர்கள் தனது உம்மத்தை ஆலுபைத்தைச் சூழ ஒன்றிணைப்பதற்கு விரும்பினார்கள். ஆம், ஆலுபைத்தைச் சேர்ந்த உத்தமர்கள், ஈமான், நம்பிக்கை விடயத்தில் பிறரை விட மிகவுமே மிகைத்தவர்கள். அல்லாவிட்டாலும், விசுவாசம், சரணாகதித்தன்மை, அடிபணிதல், சார்புடைமை போன்ற விடயங்களில் மிகவுமே முன்னிலையில் உள்ளனர். ஏனெனில், அவர்கள் இயல்பு ரீதியாகவும், பரம்பரை ரீதியாகவும், பிறப்பாலும் இஸ்லாத்திற்குச் சார்பானவர்கள் ஆவார்கள். பிறப்பிலிருந்து வரும் சார்பு நிலையானது நலிவானதாகவும், கண்ணியத்தைக் கொண்டு வராததாகவும், ஏன் அநீதியானதாகவும் தான் இருப்பினும் கூட விட்டுக்கொடுக்கப் படுவதில்லை. நிலைமை இவ்வாறிருக்க, மிகப் பலம் வாய்ந்ததும், மிகச் சரியானதும், அதிக கௌரவத்தைக் கொண்டுவந்து சேர்க்கக் கூடியதும், சங்கிலித் தொடராக ஒட்டுமொத்த முன்னோர்களையும் பிணைக்கின்றதும், அந்த முன்னோர்களுக்குக் கண்ணியத்தையும் உயர்வையும் பெற்றுக் கொடுத்ததும், அவர்கள் அதற்காகத் தமது உயிரையே அர்ப்பணம் செய்ததுமான ஒரு சத்தியத்திற்குச் சார்பாக இருப்பது எந்த அளவு அடிப்படையானதும் இயல்பூக்கமானதும் என்பது தெட்டத் தெளிவானதாகும். இந்த உண்மையை உணர்ந்துகொள்ளும் ஒருவர் அந்தச் சத்தியத்திற்குச் சார்பான தனது ஆதரவை விட்டுக்கொடுப்பது சாத்தியமாகுமா? அஹ்லுல் பைத்கள், இந்த வலுவான பிணைப்பின் காரணமாகவும் இஸ்லாத்துடனான இயல்பான உறவின் காரணமாகவும் தீனுல் இஸ்லாத்திற்குச்

---

[4]: திர்மிதி, மனாகிப்: 31 முஸ்னத், 3: 14, 17, 26

சார்பான மிகச் சிறியதொரு துரும்பைக் கூட மிகப்பெரியதொரு அத்தாட்சியைப் போன்று ஏற்றுக்கொள்வார்கள். ஏனெனில், இயல்பாகவே அவர்கள் அதற்குச் சார்பானவர்களாவார்கள். பிறரைப் பொருத்தவரை அவர்கள் பலமானதோர் அத்தாட்சிக்கும் கூட மெதுவாகவே துலக்கம் காட்டுவார்கள்.

**நான்காவது குறிப்பு**

மூன்றாவது குறிப்பின் நிழலில் ஷீஆக்களோடு அஹ்லுஸ்ஸுன்னத் வல் ஜமாத்துக்கிடையிலுள்ள மோதலுக்குக் காரணியாக அமைந்ததும் அகாஇதுல் ஈமான் நூல்களுக்குள்ளும் ஈமானிய அடிப்படைகளின் வரிசைக்குள்ளும் நுழைகின்ற அளவுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டதுமான ஒரு விடயத்தைச் சுருக்கமாகத் தொட்டுக் காட்டுகின்றோம். அந்த விடயம் பின்வருமாறு:

அஹ்லுஸ்ஸுன்னத் வல் ஜமாத்தினர் ''ஹழரத் அலி (ரழி) அவர்கள் நான்கு கலீபாக்களிலும் நான்காமவர் ஆவார்கள். ஹழரத் ஸித்தீக் (ரழி) அவர்கள் அதிக ஏற்றமிக்கவராகவும், பொருத்தமானவராகவும் இருந்தமையினால் தான் முதலில் பொறுப்பு அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது'' என்று கூறுகின்றனர். ஷீஆக்களோ "கிலாபத் ஹழரத் அலி (ரழி) அவர்களுடைய உரிமையாக இருக்க, அவர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டது. அனைவரை விடவும் அதிகம் ஏற்றமானவர்கள் ஹழரத் அலி (ரழி) அவர்கள் ஆவார்'' என்று கூறுகின்றனர். ஷீஆக்கள் தமது வாதங்களுக்குக் கொண்டுவரும் ஆதாரங்களின் சுருக்கமானது: 'ஹழரத் அலி (ரழி) அவர்களின் மகத்துவம் சம்பந்தமாக வரும் ஹதீஸ்கள், ஹழரத் அலி (ரழி) அவர்கள் தனது ஷாஹுல் விலாயத் பட்டத்தினூடாகப் பூரா அவ்லியாக்கள் மற்றும் தரீகத்துக்களின் ஊற்றுவாயாக இருக்கின்ற விடயம், அறிவு, வலிமை மற்றும் இபாதத் விடயங்களில் அன்னாரது பிரமிப்பூட்டக் கூடிய பண்புகள், நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள், அன்னார் மீதும் அன்னாரிலிருந்து தொடர் சங்கிலியாக நீளப்போகும் ஆலுபைத் மீதும் காட்டிய அதீத ஈடுபாடு போன்ற விடயங்களாகும். இவற்றிலிருந்து மிகச்சிறந்தவர் ஹழரத் அலி (ரழி) அவர்களே என்றும் கிலாபத் எப்போதுமே அவர்களது உரிமையாக இருந்தது; ஆனால், ஒவ்வொரு முறையும் அது அவர்களிடமிருந்து பலாத்காரமாகப் பறிக்கப்பட்டது' என்றும் வாதிடுகின்றனர்.

**இந்த வாதத்திற்கான பதில்:** ஹழரத் அலி (ரழி) அவர்கள் அடுத்தடுத்து இருபது வருடங்களிற்கும் அதிகமாகத் தனது முழுப்பொருத்தத்தோடு முன்சென்ற மூன்று கலீபாக்களுக்கும் கட்டுப்பட்டு அவர்களது அவையில் ஷைகுல் இஸ்லாம் பதவியில் இருந்தமையானது ஷீஆக்களின் மேற்படி வாதத்தைப் பசப்பானதாக மாற்றி விடுகின்றது. மேலும், முன்சென்ற மூன்று கலீபாக்களினாலும் கிலாபத் காலகட்டத்தில் இஸ்லாத்திற்காக ஈட்டப்பட்ட வெற்றிகள், இஸ்லாத்தின் எதிரிகளுடனான போராட்டங்கள் என்பவற்றுடன் ஹழரத் அலி (ரழி) அவர்களுடைய காலத்தில் நிகழ்ந்த அசம்பாவிதங்கள் என்பன மீண்டும் மீண்டும் இஸ்லாமிய கிலாபத்துடைய விடயத்தில் ஷீஆக்களின் வாதத்தைப் பொய்யாக்குகின்றன. எனவே, இவ்விடத்தில் அஹ்லுஸ்ஸுன்னத் வல் ஜமாஅத்தின் வாதங்கள் சத்தியமானவையாகும்.

**ஒருவேளை பின்வருமாறு கூறப்பட்டால்:** அடிப்படைகளின்படி ஷீஆ இரண்டு வகையாகும். ஒன்று, ஷீஆஉல் விலாயத் ஆகும். அடுத்தது ஷீஆஉல் கிலாபத் ஆகும். இந்த இரண்டாவது பகுதிக்குள் உள்நோக்கங்களும் அரசியலும் கலந்து மாசடைந்து விட்டமையினால் இந்தப் பகுதியை ஒதுக்கி விடுவோம். இவர்களின் வாதம் உண்மையற்றது என்பதை ஏற்றுக்கொள்வோம். ஆனால், முதலாவது பகுதியில் உள்நோக்கங்களோ அரசியலோ கிடையாது. இந்த வகையில், மாசுபடாத இந்த ஷீஆஉல் விலாயத்தைச் சேர்ந்தவர்களோ

ஷீஆஉல் கிலாபத்தை உண்மைப்படுத்திச் சரி காண்கின்றனர். அதாவது, தரீக்கத்துக்களைச் சேர்ந்த அவ்லியாக்களுள் ஒரு பகுதியினர் ஹழரத் அலி (ரழி) அவர்களையே ஏற்றம் மிக்கவர்களாகக் கருதுகின்றனர். இந்த வகையில், அரசியலை மையப்படுத்தி வாதிக்கும் ஷீஆஉல் கிலாபத்தினரின் வாதங்களை உண்மைப்படுத்துகின்றனர்.

**பதில்:** ஹழரத் அலி (ரழி) அவர்களை இரண்டு கோணங்களில் பார்ப்பது அவசியப்படுகின்றது. முதலாவது, தனிப்பட்ட அந்தஸ்துக்கள், அடைவுகள் என்ற கோணத்திலாகும். இரண்டாவது, ஆலுபைத்துடைய கூட்டான்மாவைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற கோணத்திலாகும். ஆலுபைத்துடைய கூட்டான்மாவானது ரஸுலே அக்ரம் அலைஹிஸ்ஸலாது வஸ்ஸலாம் அவர்களின் ஒருவகை இயல்பைப் பொதியப்பெற்றதாகும். இந்த வகையில், முதலாவது கோணத்தின் அடிப்படையில் அஹ்லுல் ஹகீகத் ஆகிய பூரா சத்தியவான்களும் ஒருமித்த கருத்துடன் ஹழரத் அபூபக்கர் மற்றும் ஹழரத் உமர் (ரழி) ஆகியோரை முற்படுத்துகின்றனர். இஸ்லாத்திற்கான தியாகங்கள் மற்றும் இறை நெருக்கம் போன்ற விடயங்களில் உயர் பதவிகளைக் கொண்டவர்களாக அவர்களை அடையாளம் காண்கின்றனர். இரண்டாவது கோணத்தின் அடிப்படையில் நோக்கினால், ஹழரத் அலி (ரழி) அவர்கள் ஆலுபைத்துடைய கூட்டான்மாவின் பிரதிநிதியாகவும், ஆலுபைத்துடைய கூட்டான்மாவானது ஒரு வகையில் ஹகீகதுல் முஹம்மதிய்யாவைப் பிரதிநிதித்துவப் படுத்துவதாகவும் இருப்பதால் இந்தக் கோணத்தில் ஒப்பீட்டிற்கேனும் எடுக்க முடியாத ஒன்றாகும். ஆம், ஹழரத் அலி (ரழி) அவர்கள் சம்பந்தமாகப் பிரமாதமாகப் புகழப்பட்டு வரும் நபியுடைய வார்த்தைகள் இரண்டாவது கோணத்தோடு சம்பந்தப்பட்டவை ஆகும். இந்த உண்மைக்கு வலுசேர்க்கும் ஒரு ஸஹீஹான அறிவிப்பு பின்வருமாறு: ''ஒவ்வொரு நபியுடைய பரம்பரையும் அவர்களிலிருந்து உருவாவதாகும். எனது பரம்பரையானது அலி (ரழி) உடைய பரம்பரையாகும்.''[5]

ஏனைய கலீபாக்களை விட ஹழரத் அலி(ரழி) அவர்களைப் புகழும் விதமாக வரும் ஹதீஸ்கள் அதிகமதிகம் பரவியதில் உள்ள பின்புலக் காரணியானது, உமையாக்களும் கவாரிஜ்களும் அன்னவர்கள் மீது பொய்ப் புரட்டுக்களைக் கொண்டு அநீதியான முறையில் தாக்குதல் தொடுத்து அன்னாரைச் சிறுமைப்படுத்த முயற்சித்த வேளையில் அதற்குப் பகரமாக அஹ்லுஸ்ஸுன்னத் வல் ஜமாத்தினராகிய சத்தியவான்கள், அன்னவர்கள் சம்பந்தமாக வந்த ஹதீஸ்களை அதிகமதிகம் பரப்பினார்கள். பிற குலாபாஉர் ராஷிதீன்கள் இப்படிப்பட்ட பொய்ப் புரட்டுகளுக்கு முகம் கொடுக்காமையினால் அவர்கள் சம்பந்தமாக வரும் ஹதீஸ்களைப் பரப்புவதற்கு இந்த அளவு தேவை ஏற்படவில்லை. மேலும், எதிர்காலத்தில் ஹழரத் அலி (ரழி) அவர்கள் உள்ளிருந்தும் வெளியிருந்தும் வேதனை மிக்க நிகழ்வுகளுக்கும் பித்னாக்களுக்கும் முகங்கொடுக்கப் போவதை மாநபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் தனது நுபுவ்வத்துடைய கண்களால் பார்த்து, ஹழரத் அலி (ரழி) அவர்களை நம்பிக்கையீனத்திலிருந்து பாதுகாப்பதற்காகவும், உம்மத் அவர்கள் மீது தப்பெண்ணம் கொள்வதை விட்டும் தடுப்பதற்காகவும் مَنْ كُنْتُ مَوْلاَهُ فَعَلِيٌّ مَوْلاَهُ[6] போன்ற முக்கியத்துவம் வாய்ந்த ஹதீஸ்களினூடாக அலி (ரழி) அவர்களுக்கு ஆறுதலையும், உம்மத்திற்குத் தெளிவையும் வழங்கியுள்ளார்கள்.

ஷீஆஉல் விலாயத்தினர் ஹழரத் அலி (ரழி) அவர்கள் மீது செலுத்தும் அதி தீவிரக் காதல், தரீக்கத்துக்களால் அவர்களுக்கு வழங்கப்படும் உயர் அந்தஸ்துக்கள் என்பன -ஷீஆஉல் கிலாபத்தினரின் அளவிற்கு- அவர்களை அவர்களின் செயல்களுக்கான குற்றவாளிகளாக ஆக்காது. ஏனெனில், அஹ்லுல் விலாயத் –தமது பாதையின் தன்மைக்கேற்ப- தமது உஸ்தாத்

---

[5]: தபரானி, அல்மஜ்மஉல்கபீர், இல:2630; மஜ்மஅஸ் – ஸவாஇத், 10:333; ஃபைஸுல்கதீர், தொ.2, பக்.223, இல.1717

[6]: திர்மிதி, மனாகிப், 19 இப்னு மாஜா, முகத்திமா, 11

மார்களோடும் முர்ஷித்களோடும் முஹப்பத்வயப்பட்டவர்களாகவே இருப்பார்கள். முஹப்பத்துடைய, அதாவது காதலுடைய வினை தீவிரத்தன்மையாகும்.காதல்வயப்பட்ட ஒருவன் தான் எதைக் காதலிக்கின்றானோ அதை அதன் இயல்பான அந்தஸ்தை விட உயர்த்திப் பார்க்க ஆசைப்படுவான் அவ்வாறே செய்வான். எனவே, காதல் போதையில் தத்தளிப்பவர்கள் மன்னிப்புக்குட்பட்டவர்களாக ஆகலாம். ஆனால், அன்னவர்களின் மீதான முஹப்பதிலிருந்து வரும் போற்றுதல்கள், புகழ்ச்சிகள் என்பன பிற குலபாஉர் ராஷிதீன்கள் மீதான நிந்தனையையோ வெறுப்பையோ வளர்ப்பதற்கான காரணிகளாக அமையாதிருப்பதோடு, இஸ்லாத்தின் அடிப்படைகளை மீறாதிருக்கும் நிபந்தனைகளுடனேயே மன்னிப்புக்குரியதாக மாறும்.

ஷீஆஉல் கிலாபத்தைப் பொருத்தவரை, அரசியல் அழுக்குகளும் அரசியல் உள்நோக்கங்களும் அதற்குள் மிதமிஞ்சி நுழைந்து அதனை முழுமையாக ஆக்கிரமித்து விட்டதால், அதனைச் சார்ந்திருப்போர் பொய்ப்புரட்டுக்கள் மற்றும் பசப்பு வாதங்களிலிருந்தும் துர் நடத்தைகளிலிருந்தும் மீள முடியாதுள்ளனர். எந்த அளவுக்கெனில் لاَ لِحُبِّ عَلِيٍّ بَلْ لِبُغْضِ عُمَرَ என்ற வார்த்தையைக் கட்டியம் கூறுவதைப் போன்று –ஹழரத் உமர் (ரழி) அவர்களது கையால் பாரசீகச் சாம்ராஜ்யம் கவிழ்க்கப்பட்டதால்- அலி (ரழி) அவர்கள் மீதான நேசம் என்ற போர்வையில் உண்மையிலேயே, உமர் (ரழி) அவர்களைப் பழிதீர்ப்பதற்காக அவர்கள் மீது வஞ்சனையைக் கக்குகின்றனர். அத்தோடு, அம்ர் இப்னு ஆஸ் அவர்கள் ஹழரத் அலி (ரழி) அவர்களை எதிர்த்து நின்றமை மற்றும் உமர் இப்னு ஸஅத் ஹழரத் ஹுஸைன் (ரழி) அவர்களோடு மேற்கொண்ட இரத்தக் களரியான யுத்தம் என்பன ஷீஆக்களுக்கு "உமர்" என்ற பெயர் மீதான பயங்கரமானதொரு வெறுப்பையும் குரோதத்தையும் ஏற்படுத்தியுள்ளன.

அஹ்லுஸ்ஸுன்னத் வல் ஜமாஅத்தை விமர்சிப்பதற்கு ஷீஆஉல் விலாயத்தினருக்கு எந்த வித உரிமையும் கிடையாது. ஏனெனில், அஹ்லுஸ்ஸுன்னத் வல் ஜமாஅத்தினர் ஹழரத் அலி (ரழி) அவர்கள் மீது எவ்வகையிலும் குறை கூறாததைப் போன்றே அன்னவர்களை மிகவும் நேசிக்கின்றனர். ஆனால், ஹதீஸ்களின் எச்சரிக்கைப் படி ஆபத்தானதாக இருக்கின்ற காதல் தீவிரத்தை விட்டும் ஒதுங்கி நிற்கின்றனர். ஹதீஸ்களில் ஹழரத் அலி (ரழி) அவர்களின் நேசர்களைப் போற்றி வரும் நபிகளாரின் வார்த்தைகள், அஹ்லுஸ்ஸுன்னத்திற்குச் சொந்தமானதாகும். ஏனெனில், நெறிதவறாத நேசத்தை வெளிப்படுத்துவதன் மூலமாக அவர்கள் மீது உண்மை நேசம் செலுத்துபவர்கள் சத்தியவான்களான அஹ்லுஸ்ஸுன்னத் வல் ஜமாஅத்தினர் ஆவார்கள். ஹழரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் மீதான தீவிரக் காதல் கிறிஸ்தவர்களுக்கு எவ்வாறு ஆபத்தானதாக மாறியதோ, அவ்வாறே ஹழரத் அலி (ரழி) மீது செலுத்தப்படும் அதை ஒத்த தீவிரக் காதலும் ஆபத்தானதாகும் என்பது ஸஹீஹான ஹதீஸ்களின்படி தெளிவானதாகும்.

"ஹழரத் அலி (ரழி) அவர்களின் மேற்கூறப்பட்ட அசாதாரண அதி உயர் அந்தஸ்து ஏற்றுக்கொள்ளப்பட்டதாக இருந்ததால், அதன் பின்னர், ஹழரத் ஸித்தீக் (ரழி) அவர்களைத் தெரிவு செய்வது ஏற்றுக்கொள்ளப்பட முடியாததாகும்" என்று ஷீஆஉல் விலாயத்தினர் கூறுவார்களாயின்,

**பதில்:** ஹழரத் ஸித்தீகுல் அக்பர், ஹழரத் ஃபாருகுல் ஆஃஸாம் (ரழி) ஆகியோரின் தனிப்பட்ட அந்தஸ்து, நுபுவ்வத்துத்துடைய வாரிசாக அவர்கள் ஆற்றிய பணி என்பவற்றோடு தமது கிலாபத் காலங்களில் அவர்கள் அடைந்து கொண்ட அந்தஸ்துக்கள் என்பன தனித்தனியாக ஒரு தட்டிலும், மறுதட்டில், ஹழரத் அலி (ரழி) அவர்களின் தனிப்பட்ட அந்தஸ்துக்கள், பதவிகள் என்பவற்றோடு தமது கிலாபத் காலத்தில் அவர்கள் நிர்ப்பந்தமாகச் சந்திக்க நேரிட்ட வேதனை மிக்க சம்பவங்கள் மற்றும் தப்பெண்ணங்களுக்கு வழிவகுத்த அளப்பரிய

போராட்டங்கள் என்பவற்றால் ஈட்டிக்கொண்ட நன்மைகள் என்பவற்றையும் வைத்தால், நிச்சயமாக ஹழரத் ஸித்தீக் (ரழி) உடைய அல்லது ஹழரத் ஃபாரூக் (ரழி) உடைய அல்லது ஹழரத் துன்நூரைன் (ரழி) உடைய தட்டே கனதியானதாக இருக்கும் என்பதை அஹ்லுஸ்ஸுன்னத்தினர் கண்டு கொண்டமையாலேயே அவர்களைத் தெரிவு செய்தனர். மேலும், ரிஸாலே-இ நூர் தொகுப்பின் பன்னிரண்டாவது மற்றும் இருபத்தி நான்காவது வார்த்தைகளில் நிறுவப்பட்டதற்கிணங்க, நுபுவ்வத்தானது விலாயத்தோடு ஒப்பிடும் போது அந்தஸ்தில் எந்த அளவு உயர்ந்ததெனில் ஒரு திர்ஹம் அளவான நுபுவ்வத்துடைய ஒரு பிரதிபலிப்பானது ஒரு குவியல் அளவான விலாயத்துடைய பிரதிபலிப்புக்குப் பகரமானதாகும். இந்தக் கோணத்தில் ஹழரத் ஸித்தீகுல் அக்பர் (ரழி), ஹழரத் ஃபாரூகுல் அஃஸாம் (ரழி) ஆகியோருக்கு நுபுவ்வத்துடைய வாரிசுரிமை மற்றும் ரிஸாலத்தின் சட்டங்களை நிலைநாட்டுவதிலுள்ள பங்குகள் என்பன அல்லாஹ்வின் புறத்தினிலிருந்தும் அதிகமாக வழங்கப்பட்டிருந்தது. இதற்கு அவர்களுடைய கிலாபத் கால அடைவுகள் அஹ்லுஸ்ஸுன்னத் வல் ஜமாஅத்தினருக்கு ஆதாரமாக உள்ளன. ஹழரத் அலி (ரழி) அவர்களுடைய தனிப்பட்ட உயர் அந்தஸ்துக்கள், பதவிகள் என்பன, நுபுவ்வத்துடைய வாரிசுரிமையிலிருந்து வரும் அந்த அதிகரித்த பங்கை அதன் அந்தஸ்திலிருந்து இறக்கும் பலம் அற்றவை என்பதால், ஹழரத் அலி (ரழி) அவர்கள் ஷைகைனி முகர்ரமைன் அவர்களுடைய கிலாபத் காலங்களில் அவர்களின் அவையில் ஷைகுல் இஸ்லாமாகக் கடமையாற்றிப் பணிவிடை செய்தார்கள். ஆகவே, இந்த வகையில், ஹழரத் அலி (ரழி) அவர்களை அதிகம் நேசிக்கின்ற, கௌரவிக்கின்ற அஹ்லுல்ஹக் வஸ்ஸுன்னத்தைச் சேர்ந்தவர்கள், ஹழரத் அலி (ரழி) அவர்கள் அதிகமதிகம் நேசித்து கௌரவித்த ஷைகைன்களை எவ்வாறு நேசிக்காதிருக்க முடியும்? எவ்வாறு கௌரவிக்காதிருக்க முடியும்?

இந்த உண்மையை ஓர் உதாரணம் மூலமாக விளக்குவதாயின்: மிகவும் செல்வந்தரான ஒருவர் தனது செல்வத்திலிருந்து வாரிசுரிமைச் சொத்தாகத் தனது பிள்ளைகளுள் ஒருவருக்கு இருபது குவியல் வெள்ளியும் நான்கு குவியல் தங்கமும் கொடுக்கின்றார். மற்றவருக்கு ஐந்து குவியல் வெள்ளியும் ஐந்து குவியல் தங்கமும் கொடுக்கின்றார். மற்றவருக்கு மூன்று குவியல் வெள்ளியும் ஐந்து குவியல் தங்கமும் கொடுக்கின்றார். இந்த நிலையில் நிச்சயமாக இறுதி இருவரும் பெறுமானத்தின் அடிப்படையில் குறைவாகப் பெற்றுக் கொண்டாலும் பெறுமதியின் அடிப்படையில் அதிகமாகப் பெற்றுக் கொள்கின்றனர். ஆம்! இந்த உதாரணத்தைப் போன்றே ஷைகைன்களிடம் நுபுவ்வத் வாரிசுரிமையின் அடிப்படையிலும் ரிஸாலத்துடைய கோட்பாடுகளை நிலைநாட்டும் பணியின் அடிப்படையிலும் பிரதிபலிக்கும் அக்ரபிய்யதுல் இலாஹிய்யா ஹகீகத்[7] என்ற தங்கத்திலிருந்து கிடைக்கும் சிறிதளவு அதிகரித்த பங்கானது, தனிப்பட்ட உயர் அந்தஸ்துக்கள் மூலமாகவும் விலாயத் மூலமாகவும் ஈட்டப்படும் குர்பிய்யதுல் இலாஹிய்யா[8] மற்றும் உச்சமட்ட விலாயத் அந்தஸ்து என்பவற்றில் ஏற்படும் மிகையான அதிகரிப்புக்களைக் கூட மிகைத்து விடும். ஒப்பீட்டின் போது இந்த நுணுக்கமான விடயங்களும் கருத்திற்கொள்ளப்பட வேண்டும். இல்லாவிட்டால் வெறுமனே தனிப்பட்ட வீரம், அறிவு, விலாயத் போன்ற விடயங்கள் மாத்திரம் ஒன்றோடொன்று ஒப்பிடப்பட்டால் சத்தியத்தின் தன்மை இருட்டடிப்புச் செய்யப்பட்டு விடும். மேலும், ஹழரத் அலி (ரழி) அவர்களிடம் பிரகாசிக்கும் ஆலுபைத்துடைய கூட்டான்மாவின் அடிப்படையிலும் அந்தக் கூட்டான்மாவில் அதற்குச் சொந்தமான சம்பூரண வாரிசுரிமையின் அடியாகப் பிரதிபலிக்கும் ஹகீகதுல் முஹம்மதிய்யாவின் (அலை) அடிப்படையிலும் ஒப்பீடு செய்யப்பட முடியாது. ஏனெனில், இங்கு பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் உன்னதமான இரகசியம் பொதியப்பெற்றுள்ளது.

---

[7]: அல்லாஹ் அடியான் மீது வைக்கின்ற எல்லையில்லாத நெருக்கத்தைக் குறிக்கும் சத்தியம்.

[8]: அடியான் அல்லாஹ்வின்பால் வைக்கின்ற ஆத்மார்த்த நெருக்கம்

ஆனால், மறுபுறம் ஷீஆஉல் கிலாபத்தைச் சேர்ந்தவர்களுக்கோ அஹ்லுஸ்ஸுன்னத் வல் ஜமாஅத்தினருக்கு முன்னால் தலைகுனிவதைத் தவிர வேறு எந்தவித உரிமையும் கிடையாது. ஏனெனில், இவர்கள் ஹழரத் அலி (ரழி) அவர்களின் மீது அளப்பரிய அன்பு செலுத்துவதாக வாதித்த போதிலும் உண்மையில் அவர்களை அவமதிக்கின்றார்கள். அதாவது, அந்த உத்தமர் ஈனச்செயலில் ஈடுபடுபவராக இருந்திருக்க வேண்டும் என்பது அவர்களின் மத்ஹபுடைய வேண்டுதலாகும். ஏனெனில், அவர்களது கூற்றுப்படி, “ஹழரத் ஸித்தீக் மற்றும் ஹழரத் உமர் (ரழி) ஆகியோர் அசத்தியத்தில் இருக்கின்ற நிலையில் ஹழரத் அலி (ரழி) அவர்கள், அவர்களிடம் போலியாகத் தோழமை கொள்வது போன்று நடித்துள்ளார்கள்; ஷீஆக்களின் நம்பிக்கைப்படி தக்கிய்யா செய்துள்ளார்கள். அதாவது, முன்னைய கலீபாக்களுக்கு அஞ்சி முகஸ்துதி செய்துள்ளார்கள்.” மனசாட்சி உடையவர்களே! உங்களிடம் கேட்கிறேன், உலகம் போற்றும் இஸ்லாமியக் கதாநாயகனாக இருந்து அதற்கு மகுடமாக அஸதுல்லாஹ் என்ற பட்டத்தை வென்று, உண்மையாளர்களின் தளபதியாகவும் வழிகாட்டியாகவும் விளங்கிய ஓர் உத்தமரை, முகஸ்துதி செய்பவராகவும், பயம் கொண்டவராகவும், விரும்பத்தகாத மனிதர்களுக்கு முன்னால் போலியாக அன்பு செலுத்துவதாகப் பாசாங்கு செய்பவராகவும் இருபதுக்கும் அதிகமான வருடங்கள் அச்சத்திற்கு மத்தியில் போலியாக நடிப்பவராகவும் அசத்தியவாதிகளிடம் அடிபணிந்தவராகவும் சித்திரிக்க முற்படுவது அந்த உத்தமருக்கு செலுத்தும் உண்மையான அன்பாக இருக்க முடியுமா? இப்படிப்பட்ட அவலட்சணமான முஹப்பத்தை அனைவருக்கும் முதலில் ஹழரத் அலி (ரழி) அவர்களே வெறுத்தொதுக்குவார்கள். ஆம்! சத்தியவான்களின் மத்ஹபானது எந்த வகையிலும் ஹழரத் அலி (ரழி) அவர்களை அவமதிக்கவோ நடத்தை பிறழ்ந்தவர்களாகச் சித்திரிக்கவோ முற்படாது. அப்படிப்பட்டதொரு வீர வேங்கைக்குக் கோழைத்தனத்தை அணிகலனாக அணிவித்து அழகு பார்க்க முற்படாது. மாறாக, “ஹழரத் அலி (ரழி) அவர்கள் முன் சென்ற குலபாஉர் ராஷிதீன்களை அசத்தியத்தின் மீது கண்டுகொண்டிருப்பின் ஒரு கணப்பொழுதேனும் அவர்களை ஏற்றுக்கொண்டிருக்கவோ அவர்களுக்குக் கட்டுப்பட்டிருக்கவோ மாட்டார்கள். எனவே, அவர்களைச் சத்தியத்தின் மீதும் அந்தஸ்தில் உயர்ந்தவர்களாகவும் கண்டு கொண்டமையினால்தான், தனது ஒட்டுமொத்த ஆற்றல்களையும் பலத்தையும் அவர்கள் சென்ற சத்தியப் பாதைக்கு அர்ப்பணம் செய்தார்கள்” என்று கூறுவர்.

**சுருக்கமாக,**

எந்தவொன்றிலும் இ∴ப்ராத், த∴ப்ரீத் எனப்படும் இருதுருவ நிலைகளாகிய அதிதீவிர மற்றும் அசமந்த நிலைகள் நல்லதல்ல. எப்போதுமே இஸ்திகாமத்தை உடையது வஸத் என்ற நடுநிலையாகும். அஹ்லுஸ்ஸுன்னத் வல் ஜமாஅத்தினர் இதையே தெரிவு செய்துள்ளனர். ஆனால், துரதிஷ்டவசமாக அஹ்லுஸ்ஸுன்னத் வல் ஜமாஅத் எல்லைக்குள் வஹ்ஹாபிய்ய மற்றும் கவாரிஜிய்ய சிந்தனைகள் பகுதியளவு நுழைந்தமையினால், அதற்குள் இருக்கும் ஒரு பகுதி அரசியல் ஆர்வலர்களும் முனாபிக்குகளும் ஹழரத் அலி (ரழி) அவர்களை விமர்சிக்க முற்படுகின்றனர். அரசியல் அறியாமையினால் கிலாபத்திற்குரிய பூரண உரிமத்தை, தகுதியை வெளிக்காட்ட முடியாது போய்விட்டார்; நிர்வாக ஆற்றல் இல்லாதவராக இருந்தார் என்று இல்லாத ஒன்றை இட்டுக்கட்டுகின்றனர். ஆம்! இவர்களது இந்த உண்மைக்குப் புறம்பான சாடல்களால் அலவீக்கள் அஹ்லுஸ்ஸுன்னத்தினருக்கு எதிராகக் குரோதத்தைக் கக்குகின்றனர். ஆனால், உண்மை நிலை என்னவெனில், அஹ்லுஸ்ஸுன்னத்துடைய கோட்பாடுகளும் அடிப்படை மத்ஹப்களும் மேற்படி சிந்தனைப் பிறழ்வுகளைச் சரி காண்பதில்லை. மாறாக, அவை பிழையானவை என்பதை நிறுவுகின்றன. கவாரிஜ்கள் மற்றும் முனாபிக்களின் பக்கமாக இருந்து வரும் இப்படிப்பட்ட சிந்தனைகள் அஹ்லுஸ்ஸுன்னத்தை குற்றவாளியாக்காது. மாறாக, அஹ்லுஸ்ஸுன்னத், ஹழரத் அலி (ரழி) அவர்களிற்கு ஆதரவாக இருக்கின்ற விடயத்தில் அலவீக்களையும் மிகைத்து விட்டனர். தமது அனைத்து குத்பாக்களிலும் துஆக்களிலும், ஹழரத் அலி (ரழி) அவர்களை அன்னாரின் அந்தஸ்தை

அலங்கரிக்கும் வார்த்தைகளைக் கொண்டு நினைவு கூறுகின்றனர். விசேடமாக அஹ்லுஸ்ஸுன்னத் வல் ஜமாஅத்தைச் சேர்ந்த அவ்லியாக்களும் அஸ்.·.பியாக்களும், அன்னவர்களை தமது முர்ஷிதாகவும் ஷாகுல் விலாயத்தாகவும் பார்க்கின்றனர். அலவீக்கள், தமதும் அஹ்லுஸ்ஸுன்னத்தினரதும் வெறுப்பை உடமையாக்கிக் கொண்ட கவாரிஜ்கள் மற்றும் முனாபிக்களை ஒரு புறமாக வைத்து விட்டு ஹழரத் அலி (ரழி) அவர்களை உண்மையாக நேசிக்கின்ற அஹ்லுஸ்ஸுன்னத்தினருக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியிருப்பது தான் வேதனைக்குரிய விடயமாகும். நிலைமையின் அகோரம் எந்த அளவிற்குச் சென்றுள்ளது எனில், ஒரு பகுதி அலவீக்கள் அஹ்லுஸ்ஸுன்னத்தினர் மீது கொண்ட வெறுப்பு மற்றும் பிடிவாதத்தின் காரணமாக மேலான சுன்னத்களுக்குக் கூட மாறு செய்கின்ற ஆபத்தான ஒரு நிலையில் இருக்கின்றனர். எதுவாயினும், உலமாக்களுக்கு மத்தியிலும் பேசுபொருளாக இருக்கின்ற காரணத்தினால் இந்த விடயத்தில் அதிகமாகவே பேசி விட்டோம்.

சத்தியவான்களான அஹ்லுஸ்ஸுன்னத் வல் ஜமாஅத்தினரே! ஆலுபைத்துடனான முஹப்பத்தை தமது பாதையாகத் தெரிவு செய்திருக்கும் அலவீக்களே! விரைவாக இந்த அர்த்தமற்ற, உண்மைக்கு அப்பாற்பட்ட, விபரீதமான முரண்பாட்டை உங்களுக்கு மத்தியிலிருந்து அகற்றி விடுங்கள். இல்லாவிட்டால் தற்போது மிகப் பலத்தோடு கோலோச்சிக் கொண்டிருக்கும் அநியாயக்கார மார்க்க விரோத சக்திகள் சூழ்ச்சி செய்து, உங்களில் ஒருவரை மற்றவர் மீது தூண்டி விட்டுத் தாம் விரும்பியவர்களை அழிப்பதற்கு உங்களைப் பகடைக்காய்களாகப் பயன்படுத்துவர். பின்னர் பகடைக்காயாகப் பயன்படுத்திய உங்களையும் துவம்சம் செய்து விடுவர். நீங்கள் இருதரப்பினருமே தவ்ஹீத் மீது இருக்கின்ற காரணத்தினால் உங்களுக்கு மத்தியில் சகோதரத்துவத்தையும் ஒருமைப்பாட்டையும் நிலைநாட்டக்கூடிய அடிப்படைகளும் புனிதமான பிணைப்புக்களும் பலநூறு இருக்கின்ற போது, பிளவை வளர்க்கும் உபரியான விடயங்களைத் தூக்கி எறிவது கட்டாயமானதாகும்.

## பதினைந்தாவது கடிதம்

**இரண்டாவது கேள்வி:** ஹழரத் அலி (ரழி) அவர்களது காலத்தில் ஆரம்பித்த யுத்தங்களின் உண்மை நிலை என்ன? அந்த யுத்தத்தில் போராடியவர்கள், கொல்லப்பட்டவர்கள் மற்றும் கொன்றவர்களை எந்த நாமத்தைக் கொண்டு அழைக்கலாம்?

**பதில்:** ஜமல் யுத்தம் எனப்படும் ஹழரத் அலி மற்றும் ஹழரத் தல்ஹா, ஹழரத் ஸுபைர், ஹழரத் ஆயிஷா ஸித்தீகா (ரழியல்லாஹு தஆலா அன்ஹும் அஜ்மஈன்) ஆகிய இரு தரப்பாருக்குமிடையிலான யுத்தமானது, ''அ(d)தாலதுல் மஹ்ஸா'' எனப்படும் தூய நீதிக்கும் ''அ(d)தாலதுல் இஸா.·.பிய்யா'' எனப்படும் ஒப்பியல் நீதிக்கும் இடையிலான யுத்தமாகும். எவ்வாறெனில்,

ஹழரத் அலி அவர்கள் தூய நீதியை முன்னிறுத்தி, ஷைகைன்களுடைய காலத்தில் எவ்வாறு இருந்ததோ, மேற்கொண்டும் அதே அடிப்படையை நிலைநாட்டுவதற்காக இஜ்திஹாத் செய்தார்கள். அவரது எதிர்க் கருத்தாளர்களோ,''ஷைகைன்களுடைய காலத்தில் இருந்த தூய இஸ்லாமிய சூழலானது தூய நீதியை நிலைநாட்டுவதற்குப் பொருத்தமானதாக இருந்தது; ஆனால், காலவோட்டத்தில் இஸ்லாம் தொடர்பில் பலவீனமான ஏராளமான கோத்திரங்கள் இஸ்லாமிய சமூகத்தோடும் சமூக வாழ்வோடும் பின்னிப் பிணைந்ததால் தூய நீதியுடைய அமுலாக்கம் கடும் சிக்கல் நிறைந்ததாகும்'' என்ற வாதத்தை முன்னிறுத்தி, ''அஹ்வனுஷ் ஷர்

– மிகக் குறைந்த தீங்கு உடையதைத் தெரிவு செய்தல்’’ எனப்படும் ஒப்பியல் நீதியை அடிப்படையாக வைத்து இஜ்திஹாத் செய்தனர். இஜ்திஹாத் ரீதியான வாதப் பிரதிவாதங்கள் அரசியலினுள்ளும் நுழைந்து விட்டதன் விளைவாக யுத்தம் தோன்றியது. உண்மையிலேயே வேறு எந்தவித உள்நோக்கங்களும் இன்றி அல்லாஹ்வுக்காகவும் இஸ்லாத்தின் நலவைக் கருத்திற்கொண்டும் இஜ்திஹாத் செய்யப்பட்டுள்ளது. அந்த இஜ்திஹாதின் வாயிலாகவே யுத்தம் தோற்றம் பெற்றது. ஆகவே, நிச்சயமாக, கொன்றவர்கள் கொல்லப்பட்டவர்கள் அனைவருமாகச் சுவனவாசிகளாவர், அனைவரும் நன்மையையே பெற்றுக்கொண்டார்கள் என்று கூறமுடியும். என்னதான் ஹழரத் அலி அவர்களுடைய இஜ்திஹாத் சாலச் சிறந்ததாகவும், எதிர்த்தரப்பினரின் இஜ்திஹாத் தவறானதாகவும் இருந்தாலும் கூட அவர்கள் தண்டனைக்கு அருகதையானவர்கள் அல்லர். ஏனெனில், இஜ்திஹாத் செய்பவர் சத்தியத்தைக் கண்டுகொண்டால் இரண்டு நன்மைகள் இருக்கின்றன. கண்டுகொள்ள முடியாது போய்விட்டாலும், ஒரு வகை இபாதத்தாக இருக்கின்ற இஜ்திஹாதுடைய நன்மையாக ஒரு நன்மையைப் பெற்றுக் கொள்வார். தவறை விட்டும் மன்னிப்புப் பெற்றவராக ஆகுவார். எங்களுக்கு மத்தியில் மிகவும் பிரபல்யமிக்கவரும் வலிமையான வார்த்தைகளை உடையவருமான ஒரு பெரியவர் குர்திய மொழியில் ژِی شَرِّ صَحَابَانْ مَکَه قَال و قِیلْ لَوْ رَا جَنَّتِینَه قَاتِل و هَمْ قَتِیل என்று கூறுபவராக இருந்தார். அதாவது, ஸஹாபாக்களுடைய யுத்த விடயத்தில் பொல்லாப்புக்களைப் பரப்புபவனாக இருந்து விடாதே. ஏனெனில், கொன்றவர், கொலை செய்யப்பட்டவர் ஆக இருவருமே அஹ்லுல் ஜன்னத் ஆவர்.

## தூய நீதி, ஒப்பியல் நீதி சம்பந்தமான விளக்கம் பின்வருமாறு:

مَنْ قَتَلَ نَفْسًا بِغَيْرِ نَفْسٍ اَوْ فَسَادٍ فِى ٱلْاَرْضِ فَكَاَنَّمَا قَتَلَ النَّاسَ جَمِيعًا[9] என்ற மறை வசனத்தின் சாடையான அர்த்தத்தின் படி, ஓர் அப்பாவியின் உரிமையானது -ஒட்டுமொத்த மனிதர்களுக்காகவாயினும் சரி- மீறப்பட முடியாததாகும். பூரா மனித குலத்தின் நலவு தான் பேசுபொருளாக இருப்பினும் அதற்காக ஒரு மனிதனுடைய உயிர், உரிமைகள் பறிக்கப்பட முடியாது. ஏனெனில், வல்லோன் அல்லாஹ்வுடைய கருணைப் பார்வைக்கு உரிமை, உரிமையாகும். அதில் சிறியது, பெரியது என்பதெல்லாம் ஒரு பொருட்டல்ல. ஆகவே சிறியது பெரியதற்காகப் புறக்கணிக்கப்பட முடியாது. ஒரு ஜமாஅத்துடைய விடிவுக்காக, ஒரு நபரின் வாழ்வும் உரிமையும் அவரது பொருத்தமின்றி தியாகம் செய்யப்பட முடியாது. உம்மத்துடைய பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு ஒருவர் சொந்த விருப்பத்தோடு முன்வரும் பட்சத்தில் அது வேறு விடயமாகும்.

## ஒப்பியல் நீதி

ஒப்பியல் நீதியானது பெரும்பான்மையின் நிம்மதிக்காகவும் விடிவுக்காகவும் சிறியவற்றைத் தியாகம் செய்யும். ஜமாஅத்துடைய நலவு பேசுபொருளாக இருப்பின் தனிநபரின் உரிமைகள் அங்கு பொருட்படுத்தப்படுவதில்லை. அஹ்வனுஷ் ஷர், அதாவது மிகக்குறைந்த தீங்கை உடையது என்று கூறி ஒருவகை ஒப்பியல் நீதியை நிலைநாட்ட முனையும். ஆனால், அடிப்படை நீதி நிலைநாட்டப்பட முடியுமானதாக இருக்கும் போது ஒப்பியல் நீதியை நாட முடியாது. அவ்வாறு நாடினால் அது அநியாயமாகும்.

---

[9]: அல்மாஇதா, 32

ஆம், இமாம் அலி ரழியல்லாஹு அன்ஹு அவர்கள், அடிப்படை நீதியானது ஷைகைன்களுடைய காலத்தில் இருந்ததைப் போன்றே தற்போதும் அமுல்படுத்த முடியுமானதாக இருக்கின்றது என்ற நிலைப்பாட்டை வலியுறுத்தி, இஸ்லாமிய கிலாபத்தை அந்த அடிப்படையின் மீதே மேலெழுப்பினார்கள். எதிர்க்கருத்தாளர்களோ, ''அமுல்படுத்துவது அசாத்தியமானது, ஏராளமான சிக்கல்கள் இருக்கின்றன, இஸ்லாம் ஆபத்தில் இருக்கின்றது'' என்று கூறி ஒப்பியல் நீதியை மையமாக வைத்து இஜ்திஹாத் செய்தனர். இதற்கு அப்பால் வரலாற்றில் கூறப்படும் மேலதிகக் காரணங்கள் உண்மையானவையல்ல. மாறாக, அவை வெறும் புரட்டுக்களாகும்.

**பின்வருமாறு வினவுவாயெனில்:**

இமாம் அலி அவர்கள், பிரமிக்கத்தக்க ஆற்றல் மிக்கவராகவும், அசாதாரணப் புத்திக்கூர்மை மிக்கவராகவும் கிலாபத்திற்கு அதிக அருகதை உடையவர்களாகவும் இருந்தும், இஸ்லாமிய கிலாபத் விடயத்தில் முன்சென்றவர்களோடு ஒப்பிடும் போது சாதிக்க முடியாது போனமைக்கான காரணம் என்ன?

**பதில்:** அந்த கண்ணியத்துக்குரிய உத்தமர், ஆட்சியதிகாரங்களை விட மிகவுமே முக்கியத்துவம் வாய்ந்த வேறு பணிகளுக்கு அதிகம் அருகதையுடையவர்களாகத் திகழ்ந்தார்கள். ஒருவேளை அரசியலில் சம்பூரணமாகச் சாதித்துப் பூரண அதிகாரம் மிக்கவராக இருந்திருப்பின், ''ஷாஹ் விலாயத்'' என்ற அர்த்தபுஷ்டியான மகுடத்தை அதற்குரிய ஹக்கோடு சூடிக்கொள்ள முடியாதவராக ஆகியிருப்பார். உண்மை நிலை இதுவென்பதால், வெளிப் பகட்டானதும் அரசியல் ரீதியானதுமான கிலாபத்தால் கிடைக்கின்ற மாட்சிமையை விட மிகவுமே சிரேஷ்டமானதோர் ஆத்மார்த்த மாட்சிமையைப் பெற்றுக் கொண்டார்கள். அத்தோடு, அனைத்து அறிவுகளிலும் தேர்ச்சிமிக்க பன்முக ஆசான் என்ற அந்தஸ்திற்கு உயர்ந்தார்கள். மேலும், அன்னாருடைய அந்த ஆத்மார்த்த மாட்சிமையானது கியாமத் நாள் வரைக்கும் நிரந்தரமானதாக ஆகி விட்டது.

மறுபுறம், ஹழரத் இமாம் அலி அவரகள் ஸி∴ப்பீன் யுத்தத்தில் ஹழரத் முஆவியா அவர்களின் அணியினரோடு புரிந்த போரானது, கிலாபத்தையும் அதிகாரத்தையும் முன்னிறுத்தி இடம்பெற்ற போராகும். அதாவது, ஹழரத் இமாம் அலி அவர்கள் தீனுடைய சட்டங்களையும், இஸ்லாத்தின் சத்தியக் கோட்பாடுகளையும், மறுமையையும் அடிப்படையாக வைத்து, ஆட்சியதிகாரத்தின் வேண்டுதல்களான ஒரு பகுதி சட்டதிட்டங்கள் மற்றும் அரசியலின் இரக்கமற்ற நியதிகள், நிர்ப்பந்தங்கள் என்பவற்றை அமுல்படுத்துவதை விட்டும் ஒதுங்கி – நஷ்டங்களையும் இழப்புக்களையும் பொருந்திக் கொண்டு- விட்டுக்கொடுப்பவராக இருந்தார்கள். ஹழரத் முஆவியா மற்றும் அவரது அணியினரோ, இஸ்லாமிய சமூக வாழ்வை தமது அரசியல் அதிகாரத்தைக் கொண்டு வலுவூட்டுவதற்காக அஸீ(ணு)மத் எனப்படும் நேர்மை மற்றும் எச்சரிக்கையுடன் கூடிய விழிப்புணர்வை விட்டுவிட்டு சலுகைகளில் அதிகம் நாட்டம் கொண்டார்கள்; சலுகைகளை அவசியமானவையாகக் கருதினார்கள். உண்மையில், அரசியல் களத்தில் தமது மேலாதிக்கத்தை அத்தியாவசியமானதாகக் கருதி சலுகைகளை நாடியதன் மூலம் தவறிழைத்து விட்டனர்.

மறுபுறம், ஹழரத் ஹஸன் மற்றும் ஹுஸைன் ஆகியோர் உமையாக்களுக்கெதிராக மேற்கொண்ட போராட்டங்கள் மார்க்கத்திற்கும் தேசிய வாதத்திற்கும் இடையிலான போராட்டமாகும். அதாவது, உமையாக்கள் இஸ்லாமிய தேசத்தை அரபு தேசியவாதத்தின் மீது ஸ்தாபிப்பதற்காக இஸ்லாமியப் பிணைப்பைப் பின்தள்ளி தேசியவாதப் பிணைப்பை முற்படுத்தினார்கள். இதனால் இரண்டு கோணங்களில் பாதிப்பை ஏற்படுத்தினார்கள்.

**ஒன்று:** பிற இனங்களைச் சேர்ந்தவர்களை நோவினை செய்து அவர்களுக்கு மத்தியில் கொந்தளிப்பை ஏற்படுத்தினர்.

**இரண்டாவது:** குழுவாதம், தேசியவாதம் போன்ற அடிப்படைகள், ஒருபோதும் நீதிக்கும் சத்தியத்திற்கும் வழிப்படாது; நீதியை நிலைநாட்டாது; எப்போதும் அநீதியே இழைக்கும். ஏனெனில், தேசியவாதம் தொற்றிய ஒரு நீதவான், தனது இனத்தவனையே முற்படுத்துவான். இவனால் ஒருபோதும் நீதி செலுத்த முடியாது. எனவே, اَلْإِسْلَامِيَّةُ جَبَّتِ الْعَصَبِيَّةَ الْجَاهِلِيَّةَ * لاَ فَرْقَ بَيْنَ عَبْدٍ حَبَشِيٍّ وَسَيِّدٍ قُرَيْشِيٍّ اِذَا اَسْلَمَا[10] என்ற திட்டவட்டமான அறிவிப்புக்களுக்கிணங்க மார்க்கப் பிணைப்பிற்குப் பதிலாக இனவாதப் பிணைப்பு பிரதியீடு செய்யப்பட முடியாது. அவ்வாறு செய்யப்படும் எனில், அங்கு நீதி நிலைநாட்டப்பட முடியாது. ஏனெனில், அங்கு மனசாட்சிக்கு இடமில்லாது போய் விடும்; ஹக்கானியத் மறைந்து விடும்.

ஆம், ஹழரத் ஹுஸைன் அவர்கள் மார்க்கப் பிணைப்பு என்ற அடிப்படையை முன்னிறுத்தி, சத்தியத்தின் காவலனாக அவர்களுக்கெதிராகப் போராடினார்கள்; இறுதியில் ஷஹாதத் என்ற உயர் பதவியை அடைந்து கொண்டார்கள்.

**ஒருவேளை பின்வருமாறு கேட்கப்பட்டால்:** அவர்கள் இந்த அளவு சத்தியத்தின் மீதும் உண்மையின் பக்கமாகவும் இருந்த போதிலும் ஏன் சாதிக்க முடியாதவர்களாக ஆகி விட்டார்கள்? ஏன் இறை நியதியும் இறை கருணையும், அன்னவர்களையும் அன்னவர்களைச் சார்ந்தவர்களையும் அப்படிப்பட்ட கவலைக்கிடமானதொரு முடிவுக்குள் சென்று வீழ்வதற்கு அனுமதித்தது?

**பதில்:** ஹழரத் ஹுஸைன் அவர்களின் அணியில் அவர்களுக்கு மிகவும் நெருக்கமாக இருந்த சிலரைத் தவிர, அந்த அணியில் இணைந்து கொண்ட பிற இனங்களைச் சேர்ந்தவர்களிடம் – பாதிப்புக்குட்பட்ட தமது இனப்பெருமைகள் காரணமாக- அரபு இனத்திற்கெதிரான ஒரு பழிவாங்கும் சிந்தனை மேலோங்கியிருந்தமையானது, ஹழரத் ஹுஸைன் மற்றும் அவர்களது தோழர்களின் தூய்மையான பிரகாசமான நோக்கங்களையும் பணிகளையும் மாசுபடுத்தி விட்டது; பெரும்பான்மையினரின் நோக்கங்களுக்கு மத்தியில் அவர்களின் நன்னோக்கங்களைச் செல்லுபடியற்றதாக ஆக்கி விட்டது. இதனால் அவர்களுடைய தோல்வி நிச்சயமானது.

ஆனால், இறை நியதியின் அடிப்படையில் பார்க்கும் போது அந்தக் கவலைக்கிடமான முடிவில் பொதிந்துள்ள ஞானம் வேறு விதமானதாகும். ஹஸன், ஹுஸைனோடு அவர்களது குடும்பத்தினர் மற்றும் வழித்தோன்றல்கள், ஓர் ஆத்மார்த்த அதிகாரத்திற்கும் மாட்சிமைக்குமான வேட்பாளர்களாக இருந்தார்கள். உலகாயுத அதிகாரமும் ஆத்மார்த்த அதிகாரமும் இரண்டறக்கலப்பது மிகவும் சிக்கலானதாகும். இதன் காரணமாக கழா கத்ர் அவர்களுக்கு உலகை வெறுக்கும்படி செய்து விட்டது. உலகத்தின் அசிங்கமான முகத்தை அவர்களுக்குப் படம் பிடித்துக் காட்டியது, உள்ளத்தளவில் உலகோடு இருந்த கொஞ்சநஞ்சப் பற்றுக்களும் கூட அகன்று விடட்டும் என்பதற்காக. ஆம், அவர்களது கரங்கள் குறுகியதும் வெளிப்பகட்டானதுமான ஓர் அதிகாரத்திலிருந்து பின்வாங்கிக் கொண்டன. ஆனால், பிரகாசமானதும் நிரந்தரமானதுமான ஓர் ஆன்மீக அதிகாரத்தில் அன்னார் அமர்த்தப்பட்டார்கள். சாமான்ய ஆளுநராவதற்குப் பதிலாக அவ்லியாக்களும் அக்தாப்களும் நாடி வரக்கூடிய உன்னத நிலையை எய்தினார்கள்.

### மூன்றாவது கேள்வி:

---

[10]: முறையே: புஹாரி, அஹ்காம்,4, அபூ தாவூத், ஸுன்னா,5

அந்த அருள்பாலிக்கப்பட்ட உத்தமர்கள் இந்த அளவு கொடூரமாகவும் அயோக்கியத்தனமாகவும் நடாத்தப்பட்டமையிலுள்ள ஞானம் தான் என்ன?

**பதில்:** மேலே தெளிவுபடுத்தப்பட்டதைப் போன்று, ஹழரத் ஹுஸைன் அவர்களுடைய எதிர்த்தரப்பினராகிய உமையாக்களுடைய அதிகாரத்தில், மூர்க்கத்தனமான அக்கிரமங்களுக்குக் காரணியாக அமைந்த மூன்று அடிப்படைகள் காணப்பட்டன.

**ஒன்று:** ஈவிரக்கத்திற்கு இடமற்ற அரசியலின் ஒரு கோட்பாடாக இருக்கின்ற, ‘‘அரசாங்கத்தின் நிம்மதி மற்றும் பாதுகாப்புக்காகவும் ஒழுங்கு கட்டுப்பாடு என்பவற்றின் ஸ்திரப்பாட்டுக்காகவும் தனிநபர்களின் வாழ்வினைக் காவு கொடுப்பது தகும்’’ என்ற விதியின் செல்வாக்கு.

**இரண்டாவது:** அவர்களது அதிகாரம், குழுவாதம் மற்றும் தேசியவாதத்தை ஆதாரமாகக் கொண்டிருந்தமையால், ‘‘இனத்தின் நிம்மதிக்காக ஏனைய அனைத்தும் தியாகம் செய்யப்பட முடியும்’’ என்ற இனவாதத்தின் இரக்க வாடையற்றுப் போன ஒரு விதி அங்கு கோலோச்சியது.

**மூன்றாவது:** வாழையடி வாழையாக ஹாஷிமீக்களுக்கெதிராக உமையாக்களிடம் இருந்து வந்த போட்டி மனப்பான்மையானது, யஸீத் போன்ற சிலரின் நரம்பு நாளங்களுடன் கலந்திருந்தமையினால், ஈவிரக்கமற்ற ஓர் அக்கிரமத்தை அரங்கேற்றுவதற்கு அவர்கள் முன்வந்தனர்.

**நான்காவதாகக் கூற முடியுமாக உள்ள ஒரு காரணியானது,** ஹழரத் ஹுஸைன் அவர்களுடைய அணியினரிடமிருந்து வெளிப்பட்டது. அதாவது, உமையாக்கள் அறபு இனவாதத்தை அடிப்படையாக வைத்து, பிற இனத்தவர்களை ‘‘மமாலிக்’’ என்ற பிரயோகத்தினூடாக, அடிமைகளைப் போன்று நடாத்தினர். இது பிற இனத்தவர்களின் இனப்பெருமைகளுக்குக் களங்கம் ஏற்படுத்தும் காரணியாக அமைந்தமையால், அவர்கள் பழிவாங்கும் உணர்விலும் குரோதம் தீர்க்கும் சிந்தனையிலுமே ஹழரத் ஹுஸைனுடைய அணியில் இணைந்து கொண்டனர். இது உமையாக்களின் இனவெறிக்கு இன்னும் எண்ணெயூற்றும் ஒரு செயலாக இருந்தமையால், மிகவும் மூர்க்கத்தனமானதும், இரக்க வாடையற்றுப் போனதுமான அந்தப் பிரபலமான அனர்த்தத்திற்கு ஒரு வகையில் அவர்களும் காரணமாக அமைந்து விட்டனர்.

மேற்கூறப்பட்ட நான்கு காரணிகளும் நமக்குத் தெளிவாகப் புலனாகுபவையாகும். விதியுடைய கோணத்தில் பார்க்கின்ற போது, ஹழரத் ஹுஸைனும் அவர்களது உறவினர்களும் அந்த அனர்த்தம் காரணமாக ஈட்டிக் கொண்ட மறுமை விளைவுகள், ரூஹானிய்ய அதிகாரங்கள், ஆன்மீக உயர்ச்சிகள் என்பன எந்த அளவு பெறுமதி மிக்கவையெனில், இவற்றுக்கு முன்னால் அந்த அனர்த்தத்தின் மூலமாக அனுபவித்த கஷ்டங்கள், வேதனைகள் என்பன மிகவும் இலகுவானதாகவும் மலிவானதாகவும் ஆகிவிடும். ஒரு வீரன் ஒரு மணித்தியால சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டு ஷஹீதாக்கப்பட்டால் எவ்வாறு, பிறர் பத்து வருடம் முயற்சி செய்தாலும் அடைந்து கொள்ள முடியாத ஒரு பதவியை, அந்தஸ்தை அடைந்து கொள்கின்றார் என்பதைச் சிந்தியுங்கள். ஒருவேளை ஷஹீதாக்கப்பட்ட பின்னர் அந்த வீரனிடம் கேட்க முடியுமாக இருந்தால், ‘‘நிச்சயமாக, சிறியதொரு விடயத்தைக்கொண்டு ஏராளமான விடயங்களை வெற்றியீட்டிக் கொண்டேன்’’ என்று கூறுவான்.

## நபித்துவ அற்புதங்கள் சம்பந்தமான பத்தொன்பதாவது கடிதத்திலிருந்து

**ஐந்தாவது அடையாளம்:** மறைவான நிகழ்வுகள் சம்பந்தமான அறிவிப்புக்களிலிருந்து ஒரு சில உதாரணங்களைக் குறிப்பிடுகின்றோம்.

ஸஹீஹான அறிவிப்பாளர்கள் மூலமாக முதவாதிர் அந்தஸ்தோடு எம்மை அடையப்பெற்றதற்கிணங்க, ரஸூலே அக்ரம் அலைஹிஸ்ஸலாது வஸ்ஸலாம் அவர்கள் மிம்பரில் ஸஹாபாக்களுக்கு மத்தியில் இருந்துகொண்டு பின்வருமாறு அறிவித்தார்கள்: اِبْنِی حَسَنٌ هَذَا سَيِّدٌ سَيُصْلِحُ اللَّهُ بِهِ بَيْنَ فِئَتَيْنِ عَظِيمَتَيْنِ[11] ஆம், நாற்பது ஆண்டுகளுக்குப் பின்னர் இஸ்லாத்தின் இரண்டு பெரும் படைகள் எதிரெதிரே சந்திக்க நேர்ந்த போது, ஹழரத் ஹஸன் ரழியல்லாஹுஅன்ஹு அவர்கள் ஹழரத் முஆவியா (ரழி) அவர்களோடு உடன்படிக்கை செய்து, கண்ணியத்துக்குரிய தனது பாட்டனாரின் மறைவோடு சம்பந்தப்பட்ட அந்த அற்புதத்தை உண்மைப்படுத்தினார்கள்.

**இரண்டாவது:** ஸஹீஹான அறிவிப்பின்படி, நபியவர்கள் ஹழரத் அலியிடம் سَتُقَاتِلُ النَّاكِثِينَ وَالْقَاسِطِينَ وَالْمَارِقِينَ[12] என்று கூறினார்கள். இதன் மூலமாக ஜமல் யுத்தத்தையும், சி∴ப்பீன் யுத்தத்தையும், கவாரிஜ்களுடனான யுத்தத்தையும் முன்னறிவிப்புச் செய்தார்கள்.

மேலும், ஹழரத் அலி (ரழி) அவர்களும் ஹழரத் ஸுபைர் அவர்களும் பரஸ்பரம் சிநேகிதர்களாக இருந்த ஒரு காலத்தில், நபியவர்கள் ஹழரத் அலி அவர்களைப் பார்த்துக் கூறினார்கள்: “இவர் உங்களுக்கெதிராக யுத்தம் புரிவார். ஆனாலும், சத்தியம் அவர் பக்கம் இருக்காது.”[13]

மேலும், தனது பரிசுத்தமான மனைவியரைப் பார்த்துக் கூறினார்கள்: “உங்களில் ஒருவர் பெரியதொரு பித்னாவிற்குத் தலைமை தாங்குவார். அவரைச் சூழ ஏராளமானவர்கள் கொல்லப்படுவார்கள்.”[14]

وَتَنْبَحُ عَلَيْهَا كِلاَبُ الْحَوْئَبِ[15]

ஆம், முப்பது வருடங்களுக்குப் பின்னர் ஹழரத் அலி அவர்கள் ஹழரத் ஆஇஷா, ஸுபைர் மற்றும் தல்ஹா ஆகியோருக்கெதிராக ஜமல் யுத்தத்தில் மேற்கொண்ட போராட்டமும், ஹழரத் முஆவியாவிற்கெதிராக ஸி∴ப்பீன் யுத்தத்தில் மேற்கொண்ட போராட்டமும் கவாரிஜ்களுக்கெதிராக கரவ்ரா மற்றும் நஹ்ருவானில் மேற்கொண்ட போராட்டமும் மேற்கூறப்பட்ட ஸஹீஹான திட்டவட்டமான மறைவைப்பற்றி முன்னறிவிப்புச் செய்கின்ற ஹதீஸ்களுக்கான நிதர்சனமான உண்மைப்படுத்தல்கள் ஆகும்.

மேலும், நபியவர்கள் ஹழரத் அலியிடம், “அவர்களது தாடியை அவர்களது தலையிலிருந்து சொட்டும் இரத்தத்தைக் கொண்டு நனைக்கப் போகின்ற ஒருவனைப் பற்றி”[16] முன்னறிவிப்புச்

---

[11]: புஹாரி, ∴பிதன்: 20, ஸுல்ஹ்: 9, 244
[12]: மஜ்முஆஉஸ் - ஸவாஇத் 7: 138 பைஹகி, தலாஇலுன் நுபுவ்வத் 6: 414 அல் - முஸ்தத்ரக் 3:139,140
[13]: இப்னு கஸீர், அல்-பிதாயா வன்நிஹாயா, 6:213 அல்-முஸ்தத்ரக், 3: 366, 367
[14]: அல்-அஸ்கலானி, ∴பத்ஹுல் பாரி, 13: 45
[15]: அல் - முஸ்தத்ரக் 3:120 ஜெம்உல் ∴பவாஇத்: 719
[16]: அல் – முஸ்தத்ரக், 3:113 முஸ்னத், 1:102, 103, 148, 156

செய்தார்கள். ஹழரத் அலியும் கூட அந்த நபரை அறிந்தே இருந்தார்கள். அவனின் பெயர் “அப்துர்ரஹ்மான் இப்னு முல்ஜமுல் கவாரிஜீ” ஆகும்.

மேலும், கவாரிஜ்களுக்கு மத்தியில் (z)ழுஸ்ஸெய்தா என்றழைக்கப்படும் விசித்திரமான ஒரு மனிதனை அவனிடமுள்ள ஒரு அடையாளத்தைக் கொண்டு கவாரிஜ்களுக்கான அறிகுறியாக அறிவிப்புச் செய்தார்கள். கொல்லப்பட்ட கவாரிஜ்களுக்கு மத்தியில் அந்த மனிதன் இருப்பதைக் கண்ட ஹழரத் அலி அவர்கள், அதை உண்மை தன் பக்கமே இருக்கின்றது என்பதற்கான ஆதாரமாக முன்வைத்து நபியுடைய அற்புதத்தைப் பறைசாற்றினார்கள்.[17]

மேலும், உம்மு ஸலாமா மற்றும் இன்ன பிறரின் ஸஹீஹான அறிவிப்பின் படி, ரஸூலே அக்ரம் அலைஹிஸ்ஸலாது வஸ்ஸலாம் அவர்கள் பின்வருமாறு முன்னறிவிப்புச் செய்கிறார்கள்: “ஹழரத் ஹுஸைன் தா.ஃ.பில் அதாவது, கர்பலாவில் படுகொலை செய்யப்படுவார்கள்.”[18] ஆம், ஐம்பது வருடங்களுக்குப் பின்னர் அரங்கேறிய அந்தக் கண் கலங்க வைக்கும் நிகழ்வுகளின் இறுதியில் அந்த மறைவான செய்தி உண்மைப்படுத்தப்பட்டது.

மேலும், தொடர்ந்தேர்ச்சையாக, “எனது ஆலு பைத் எனக்குப் பிறகு يَلْقَوْنَ قَتْلاً وَ تَشْرِيدًا- படுகொலைகளுக்கும் அக்கிரமங்களுக்கும் முகம் கொடுப்பார்கள்”[19] என்று முன்னறிவிப்புச் செய்துள்ளார்கள். அத்தோடு, அவ்வப்போது அதனை விரிவாக விளக்கியும் உள்ளார்கள். இறுதியில் அவ்வாறே நடந்தேறியது.

**இந்த இடத்தில் முக்கியமானதொரு கேள்வி எழலாம்:** “ஹழரத் அலி அவர்கள் கிலாபத்திற்கு அதிகம் அருகதையுள்ளவர்களாகவும் அதேநேரம் ரஸூலே அக்ரம் அலைஹிஸ்ஸலாது வஸ்ஸலாம் அவர்களுடைய உறவு முறையாகவும், அசாதாரண வலிமை மற்றும் அறிவாற்றல் மிக்கவராகவும் இருந்த போதிலும், ஏன் கிலாபத்தில் அவர் முன்னிலைப் படுத்தப்படவில்லை? ஏன் அவர்களுடைய கிலாபத் காலத்தில் இஸ்லாம் ஏராளமான மேடு பள்ளங்களைச் சந்திக்க நேர்ந்தது?

**பதில்:** ஆலுபைத்தைச் சேர்ந்த ஒரு குத்புல் ஆஸாம் பின்வருமாறு கூறியுள்ளார்கள்: “ரஸூலே அக்ரம் அலைஹிஸ்ஸலாது வஸ்ஸலாம் அவர்கள் முதலில் ஹழரத் அலி (ரழி) அவர்களுடைய கிலாபத்தை நாட்டம் கொண்டார்கள். ஆனால், மறைவிலிருந்து “இறை நாட்டம் வேறாகும்” என்ற விடயம் அன்னாருக்கு அறியப்படுத்தப்பட்டது. அண்ணலவர்கள் உடனே தனது ஆசையை விட்டுவிட்டு இறை நாட்டத்தைப் பொருந்திக் கொண்டார்கள்.”[20] இறை நாட்டத்திலிருக்கின்ற பல்வேறு ஞானங்களுள் ஒன்று பின்வருமாறு அமைவது அவசியப்படுகின்றது.

நபியுடைய வபாத்துக்குப் பிறகு, ஸஹாபாக்கள் தமக்கு மத்தியில் அதி உச்சமட்ட புரிந்துணர்வு மற்றும் ஒற்றுமையின்பால் தேவை உடையவர்களாக இருந்த அந்த நிலைமையில், ஒருவேளை ஹழரத் அலி அவர்கள் தலைமைக்கு வந்திருப்பின், -பின்னர் ஹழரத் அலி அவர்களுடைய கிலாபத் காலத்தில் மேலோங்கிய நிகழ்வுகளின் அத்தாட்சிக்கிணங்க, ஹழரத் அலியிடம் காணப்பட்ட அசைந்து கொடுக்காததும், இளமைத் துடிப்பு மிக்கதும், அஞ்சா நெஞ்சம் கொண்டதும், உலகப் பற்றற்றதும், துணிச்சல் மிக்கதும்,

---

[17]: புஹாரி, மனாகிப்: 25 அதப்: 95 முஸ்லிம், ஸகாத்: 148, 156, 157
[18]: அல்-ஹைஸமி, மஜ்முஆஉஸ்-ஸவாஇத், 9:188 முஸ்னத், 6: 294
[19]: இப்னுமாஜா, ஃபிதன் 34
[20]: தைலமி, முஸ்னதுல் ஃபிர்தௌஸ், 5:ஃ316 ஸுயூதி, தாரிஹுல் ஹுலஃபா, பக்.64.

எந்தவொன்றுக்கும் பிறர் மீது தங்கியிருக்காததுமான போக்கு மற்றும் வீரதீர விடயத்தில் பெற்றிருந்த உலகப் பிரபல்யம் என்பவற்றின் காரணமாக- ஏராளமான மனிதர்களிடமும் விசேடமாகக் கோத்திரங்களிலும் பழைய போட்டி உணர்வுகளைத் தூண்டி விட்டு, பல்வேறு பிணக்குகளுக்கும் பிளவுகளுக்கும் வழிகோலியிருக்கும் என்பது சந்தேகத்திற்கிடமின்றி சாத்தியப்பாட்டுக்குட்பட்ட ஒன்றாக இருந்தது. அதேபோன்று ஹழரத் அலி அவர்களுடைய கிலாபத் பிற்போடப்பட்டதிலுள்ள ஒரு ஞானமும் கூட பின்வருமாறு: காலவோட்டத்தில் இஸ்லாம் பரவலாகத் தொடங்கிய போது பலதரப்பட்ட ஏராளமான கோத்திரங்கள் ஒன்றோடொன்று கலந்தன. அந்தக் காலகட்டம் -ரஸுலே அக்ரம் அலைஹிஸ்ஸலாது வஸ்ஸலாம் அவர்களின் முன்னறிவிப்புக்கிணங்க- பின்னர் தோற்றம் பெறப் போகும் எழுபத்திமூன்று சிந்தனைப் பிரிவுகளினதும் அடிப்படைகளைச் சுமந்திருந்த அந்தக் கோத்திரங்களுக்கு மத்தியில் பித்னாவுக்குரிய நிகழ்வுகள் தளிர்விட்ட காலகட்டமாகவும் இருந்தது. அப்படிப்பட்ட ஒரு காலத்தில் அந்த பித்னாக்களுக்கெதிராகத் தாக்குப்பிடிப்பதற்கு, ஹழரத் அலி அவர்களைப் போன்ற பிரமாதமான வீரம், தீர்க்கமான அறிவு என்பவற்றோடு ஹாஷிமீ, ஆலுபைத் போன்ற பலமும் மரியாதையும் மிக்கதொரு பின்னணிச் சக்தியையும் கொண்ட ஒருவருடைய இருப்பு அத்தியாவசியமானதாக இருந்தது. ஆம், இத்தனையையும் தன்னகத்தே கொண்டிருந்த ஹழரத் அலி (ரழி) அவர்கள் உண்மையிலேயே தாக்குப்பிடித்தார்கள். இதையே ரஸுலே அக்ரம் அலைஹிஸ்ஸலாது வஸ்ஸலாம் அவர்கள் பின்வருமாறு முன்னறிவிப்புச் செய்தார்கள்: ''நான் குர்ஆன் இறக்கப்படுவதற்காகப் போராடினேன். நீரோ அதன் (உண்மையான) வியாக்கியானத்திற்காகப் போராடுவீர்கள்.''[21]

அத்தோடு, ஒருவேளை அச்சந்தர்ப்பத்தில் ஹழரத் அலி இல்லாதிருந்திருப்பின், உலக ஆட்சியதிகாரங்கள் உமையாக்களின் ஆட்சியாளர்களை முற்றுமுழுதாக வழிபிறழச் செய்திருக்கும். ஆனால், தமக்கு எதிரில் ஹழரத் அலியையும் ஆலுபைத்தையும் கண்டுகொண்டதால், அவர்களுக்கு முன்னால் தம்மை ஸ்திரப்படுத்திக் கொள்வதற்காகவும், முஸ்லிமான அந்தச் சமூகத்திற்கு மத்தியில் தமது அதிகாரங்களைத் தக்கவைத்துக் கொள்வதற்காகவும் ஒட்டுமொத்த உமையா ஆட்சியாளர்களும் விரும்பியோ விரும்பாமலோ – தாம் செய்யா விட்டாலும்- தமக்குக் கீழுள்ளவர்களுக்கும் தமக்குச் சார்பானவர்களுக்கும் தமது முழுப் பலத்தையும் கொண்டு ஆர்வமும் ஊக்கமும் அளித்து இஸ்லாத்தின் சத்தியங்களினதும், இஸ்லாமிய ஷரீஅத்தினதும், குர்ஆனியச் சட்டங்களினதும் பாதுகாப்பிற்காக உழைத்தனர். இலட்சக்கணக்கான முஹக்கிகான முஜ்தஹித்களையும், காமிலான முஹத்திஸ்களையும், அவ்லியாக்கள், அஸ்∴பியாக்களையும் உருவாக்கினார்கள். ஒருவேளை, தமக்கு எதிரில் ஆலுபைத்துடைய வலிமை மிக்க விலாயத், மார்க்கப்பற்று மற்றும் உத்தமத்தன்மை என்பன இல்லாதிருந்திருப்பின் அப்பாஸீக்கள் மற்றும் உமையாக்களின் இறுதிக்கால நிலைமைகளைப் போன்று ஆரம்பத்திலிருந்தே ஒட்டுமொத்தமாகத் தடம் புரள்வது சந்தேகமின்றி அரங்கேறியிருக்கும்.

**ஒருவேளை கேட்கப்பட்டால்:** ஏன் இஸ்லாமிய கிலாபத் நபியுடைய ஆலுபைத்திற்குரியதாக நிர்ணயிக்கப்படவில்லை? உண்மையில், அதிக அருகதையுள்ளவர்களாகவும் அதிக உரிமையுடையவர்களாகவும் அவர்கள்தாமே திகழ்ந்தார்கள்?

**பதில்:** உலக ஆட்சியதிகாரங்கள் கண்துடைப்புக்களாகும். ஆலுபைத்தைப் பொருத்தவரை அவர்கள் இஸ்லாத்தின் உன்னத சத்தியங்களையும், குர்ஆனின் வரம்புகளையும் பாதுகாப்பதற்கான உத்தியோகத்தர்களாக இருந்தனர். கிலாபத் அல்லது அதிகாரத்திற்கு வருபவர் ஒன்றில் நபியைப் போன்று ம∴ஸுமாக இருக்க வேண்டும் அல்லது குலபாஉர்

---

[21]: அல்-ஹைஸமி, மஜ்முஆஉஸ் - ஸவாஇத், 6:244 முஸ்னத், 3: 31, 33, 82 இப்னு ஹிப்பான், ஸஹீஹ், 9:46, இல.6898

ராஷிதீன் அல்லது உமர் இப்னு அப்துல் அஸீஸ் உமையீ அல்லது மஹ்தி அப்பாஸீ ஆகியோரைப் போன்று அசாதாரணமான, உலகப் பற்றற்ற உள்ளத்தைப் பெற்றவராக இருக்க வேண்டும். அப்போது மட்டுமே அதிகார போதைக்குள் மயங்கி விழாதிருக்க முடியும். ஆனால், உண்மை நிலை என்னவெனில், எகிப்தில் ஆலுபைத்துடைய நாமத்தைக் கொண்டு தோன்றிய ஃபாத்திமிய்ய தேசத்தின் கிலாபத்தும், ஆபிரிக்காவில் உதயமான முவஹ்ஹிதீன் அரசாங்கமும், ஈரானில் நிறுவப்பட்ட ஸஃபவீக்கள் தேசமும் உலக அதிகாரங்கள் ஆலுபைத்துக்குச் சரிப்பட்டு வராது என்பதையும், அது அவர்களுக்கு அவர்களுடைய அடிப்படைப் பணியான இஸ்லாத்துக்குச் சேவகம் செய்து மார்க்கத்தைப் பாதுகாக்கின்ற பணியை மறக்கடிக்கச் செய்து விடும் என்பதையும் காட்டி நிற்கின்றன. அதேநேரம் அவர்கள் ஆட்சியதிகாரங்களை உதறித்தள்ளிய போது, பிரகாசமானதும் உன்னதமானதுமான ஓர் அமைப்பில் இஸ்லாத்திற்கும் குர்ஆனுக்கும் சேவகம் செய்துள்ளார்கள்.

ஆம்! அவதானிப்போமேயானால், ஹழரத் ஹஸன் அவர்களின் வழித்தோன்றலில் வந்த அக்தாப்கள், விசேடமாக நான்கு முன்னணி அக்தாப்கள், அதிலும் விசேடமாக கௌஸுல் அஃஸம் ஆகிய ஷெய்க் அப்துல் காதிர் ஜெய்லானி என்று ஒரு சங்கிலி தொடரும்.. மறுபுறம் ஹழரத் ஹுஸைன் அவர்களது வழித்தோன்றலில் வந்த ஏகப்பட்ட இமாம்கள், விசேடமாக ஜைனுல் ஆப்தீன், ஜாபர் ஸாதிக் என்று நீளும் ஒரு சங்கிலி தொடரும்.. ஒவ்வொருவரும் ஒவ்வொரு மஹ்தியை ஒத்தவர்களாக இருந்து ஆன்மீக வறுமையையும், ஆன்மீக இருள்களையும் அகற்றி குர்ஆனிய ஒளியையும் ஈமானியச் சத்தியங்களையும் பாரெங்கும் பரப்பினார்கள். தமது கண்ணியத்துக்குரிய பாட்டனாரின் உண்மையான வாரிசுகள் நாம் என்பதைப் பறைசாற்றினார்கள்.

ஒருவேளை கேட்கப்பட்டால்: அருள்பாலிக்கப்பட்ட இஸ்லாத்திற்கும், ஒளிமயமான அந்தப் பொற்கால சமூகத்திற்கும் ஏற்பட்ட அந்தப் பயங்கரமான இரத்தக்களரிக்குப் பின்னாலுள்ள ஞானம் தான் என்ன? அதில் இருக்கின்ற ரஹ்மத்தின் பிரதிபலிப்புக்கள் என்ன? ஏனெனில், அந்த உத்தமர்கள் அப்படிப்பட்ட நோவினைகளுக்கு அருகதையற்றவர்களாக இருந்தார்கள்.

**பதில்:** வசந்த காலத்தில் கடும் புயலுடன் கூடிய ஒரு மழையானது, அனைத்துத் தாவர இனங்களினதும், விதைகளினதும், விருட்சங்களினதும், புற்பூண்டுகளினதும் உள்ளார்ந்த ஆற்றல்களைத் தூண்டி விட்டு அவற்றை ஓங்கி வளரச் செய்கின்றது; ஒவ்வொன்றையும் தமக்கே உரிய தனிச் சிறப்புக்களோடு பூத்துக் குலுங்கச் செய்கின்றது; ஒவ்வொன்றும் தமக்கே என்றுள்ள பணிகளை முந்தியடித்துக் கொண்டு செய்வதற்கான தூண்டுலை வழங்குகின்றது என்பதை அறிவீர்கள். அதேபோன்று தான், ஸஹாபாக்களுக்கும் தாபிஈன்களுக்கும் வந்த பித்னாவும் கூட, இன்னும் விதைகளாகவே இருந்த பல்வேறுபட்ட, விதவிதமான உள்ளார்ந்த ஆற்றல்களைத் தூண்டி விட்டுத் தளிர் விடச் செய்தது. “தீப் பற்றி எரிகின்றது. இஸ்லாம் ஆபத்தில் இருக்கின்றது” என்று அனைத்துப் பிறிவினரையும் பீதி கொள்ளச் செய்து அவர்கள் அனைவரையும் இஸ்லாத்தின் பாதுகாப்பிற்காக அணிதிரள வைத்தது. ஒவ்வொருவரும் தத்தமது ஆற்றலுக்கு ஏற்றாற்போல் இஸ்லாமிய சமூகத்தின் மீது சுமத்தப்பட்டிருந்த ஏராளமான பொறுப்புக்களுள் ஒன்றைத் தனது முதுகில் சுமந்து கொண்டு பரிபூரண தியாகத்தோடு உழைத்தனர். ஒரு குழுவினர் ஹதீஸ்களைப் பாதுகாப்பதற்காகவும், ஒரு குழுவினர் ஷரீஅத்தைப் பாதுகாப்பதற்காகவும், இன்னுமொரு குழுவினர் ஈமானியச் சத்தியங்களுடைய பாதுகாப்பிற்காகவும், இன்னுமொரு குழுவினர் குர்ஆனுடைய பாதுகாப்பிற்காகவும் தம்மை அர்ப்பணித்தனர். இந்தப் பட்டியலை இன்னும் நீட்டிக் கொண்டே செல்லலாம். இவ்வாறு ஒவ்வொரு பிரிவினரும் தத்தமது ஆற்றல்களுக்கு ஏற்றாற்போல் ஒவ்வொரு பணியைச் சுமந்து கொண்டு அதற்காகவென்றே பாடுபட்டனர். இஸ்லாத்திற்குத் தொண்டு புரியும் பணியில் விறுவிறுப்பாக உழைத்தனர். நாலாபுறமும் விதவிதமான வர்ணங்களில் விதவிதமான பூக்கள் பூத்துக் குலுங்கின. அந்தச் சூறாவளி மூலமாக இஸ்லாமிய உலகின் இறுதி எல்லைகள்

வரையிலும் விதைகள் தூவப்பட்டன. எண்திசைகளும் மணங்கமழும் பூஞ்சோலைகளாக மாற்றப்பட்டன. ஆனால், அந்தப் பூக்கள் பூஞ்சோலைகளுக்கிடையில் ஆங்காங்கே அஹ்லே பித்அத் பிரிவினரின் காம்புகளும் முளை விட்டன என்பதும் கசப்பானதோர் உண்மையாகும்.

அதாவது, சர்வ வல்லமை மிக்க அல்லாஹ், தனது குத்ரத் கரம் மூலமாகத் தனது மாட்சிமையைக் கொண்டு, அந்த யுகத்தை ஒரு குலுக்குக் குலுக்கிக் கடுமையாக ஆட்டங் காணச் செய்தான். இதன் மூலம் ஓர் உந்துதலை வழங்கினான். வேட்கை உடையவர்களைத் தயார் நிலைக்குக் கொண்டு வந்து மின்சாரம் பாய்ச்சினான். அந்தக் கொந்தளிப்பிலிருந்து ஏற்பட்ட ஒருவகை மையத்திலிருந்து புறம் நோக்கிய தாக்க விசை மூலமாக, ஏராளம் ஏராளமான முஜ்தஹித்களும் பிரகாசமான முஹத்திஸ்களும் அருள்பாலிக்கப்பட்ட ஹாபிஸ்கள், அஸ்பியாக்கள், அக்தாப்கள் என்று பல்வேறுபட்டவர்களும் இஸ்லாமிய உலகின் எண்திசைகளிலும் சிதறடிக்கப்பட்டனர். ஹிஜ்ரத் செய்ய வைக்கப்பட்டனர். இதன் மூலமாக அந்த வல்லோன் அல்லாஹ் கிழக்குக் கரையிலிருந்து மேற்குக் கரை வரை இஸ்லாத்தின் வேங்கைகளைக் கொண்டு ஆர்ப்பரிக்கச் செய்து குர்ஆனுடைய கருவூலங்களிலிருந்து பயன்பெற்றுக் கொள்வதற்காக மனிதர்களின் கண்களைத் திறக்கச் செய்தான்.

### ஆறாவது அடையாளத்திலிருந்து...

மேலும், ஸஹீஹான உறுதியான அறிவிப்பிற்கிணங்க, நபி (ஸல்) அவர்கள் سَتَفْتَرِقُ اُمَّتِى ثَلاَثًا وَ سَبْعِينَ فِرْقَةً اَلنَّاجِيَةُ وَاحِدَةٌ مِنْهَا قِيلَ مَنْ هُمْ قَالَ مَا اَنَا عَلَيْهِ وَ اَصْحَابِى[22] என்று நவின்று, தனது உம்மத் எழுபத்தி மூன்று கூட்டங்களாகப் பிரியப் போவதையும், அவற்றுக்கு மத்தியில் பூரணமான விமோசனத்துக்குரிய குழுவினர் அஹ்லுஸ்ஸுன்னத் வல் ஜமாஅத்தினர் ஆவர் என்பதையும் முன்னறிவிப்புச் செய்கின்றார்கள்.

மேலும், اَلْقَدَرِيَّةُ مَجُوسُ هَذِهِ الْاُمَّةِ[23] என்று நவின்று, பல்வேறு கிளைகளாகப் பிரியப்போகும், கத்ரை நிராகரிக்கின்ற கதரியாக்கள் வகுப்பினரைப் பற்றி முன்னறிவிப்புச் செய்ததோடு, பல கிளைகளாகப் பிரியப் போகும் ரா∴பிதீக்கள் பற்றியும் முன்னறிவிப்புச் செய்துள்ளார்கள்.

மேலும், உறுதியான ஸஹீஹான அறிவிப்பிற்கிணங்க, இமாம் அலி (ரழி) அவர்களிடம் பின்வருமாறு கூறியுள்ளார்கள்: "உங்கள் விடயத்தில் ஹழரத் ஈஸா (அலை) அவர்கள் விடயத்தில் நடந்ததைப் போன்றே இரண்டு பகுதி மனிதர்கள் அழிவிற்குச் செல்வார்கள். ஒரு பகுதியினர் தீவிர முஹப்பத் மூலமாகவும். இன்னுமொரு பகுதியினர் தீவிரமான குரோதம் காரணமாகவும் அந்நிலையை அடையப்பெறுவார்கள். ஆம், ஹழரத் ஈஸா அவர்கள் மீது கிறிஸ்தவர்கள் தாம் கொண்ட முஹப்பத் காரணமாக ஆகுமாக்கப்பட்ட எல்லையை அத்துமீறிச் சென்று "இப்னுல்லாஹ்"[24] என்று சர்வ சாத்தியமற்ற ஒரு விடயத்தை இட்டுக்கட்டினார்கள். யூதர்களோ தாம் கொண்ட குரோதத்தின் காரணமாக அன்னவர்களின் விடயத்தில் அத்துமீறிச் சென்று அவர்களுடைய நுபுவ்வத்தையும் பரிசுத்தத் தன்மையையும் நிராகரித்தார்கள். உங்களது விடயத்திலும் ஒரு பகுதியினர் ஆகுமாக்கப்பட்ட எல்லையை அத்துமீறி, உங்கள் மீது கொண்ட முஹப்பத் காரணமாக அழிவை நோக்கிச் செல்வார்கள்."[25] لَهُمْ نَبْزٌ يُقَالُ لَهُمُ الرَّافِضِيَّةُ

[22]: அபூதாவூத், சுன்னத்: 1 திர்மிதி, ஈமான்: 18 இப்னுமாஜா, ∴பிக்ஹ்: 17 ஷர்ஹுஷ்ஷி∴பா, 1: 679
[23]: ஜாமிஉஸ்ஸ(ஃ)கீர், 4: 150 அபூதாவூத், ஸுன்னத்: 5
[24]: முஸ்னத், 1:160
[25]: அல்ஹைஸமி, மஜ்முஆஉஸ் - ஸவாஇத் 133 அல்ஹாகிம், அல் முஸ்தத்ரக், 123

என்ற அறிவிப்பின் மூலம், ஒரு பகுதியினர் உங்கள் மீது கொண்ட குரோதத்தால் வரம்பு மீறுவார்கள், இவர்கள் கவாரிஜ்களாவர். அத்தோடு, உமையாக்களுக்கு மத்தியில் அதிதீவிரப்போக்குக் கொண்ட ஒரு குழுவினரும் இதில் அடங்குவர். இவர்கள் நாஸிபீக்கள் என்று அழைக்கப்படுவர்.

**ஒருவேளை கேட்கப்பட்டால்:** ஆலுபைத் மீது முஹப்பத் கொள்ளுமாறு குர்ஆன் கட்டளையிடுகின்றது. ஹழரத் ரஸூலே அக்ரம் அலைஹிஸ்ஸலாது வஸ்ஸலாம் அவர்களும் கூட அதிகமாக ஊக்கமளித்துள்ளார்கள். ஆகவே, இந்த முஹப்பத்தானது ஒருவேளை ஷீஆக்களுக்கு மன்னிப்பைப் பெற்றுக்கொடுக்கும் காரணியாக அமையலாம் அல்லவா? ஏனெனில், முஹப்பத் வயப்பட்டவர்கள் ஓரளவு போதையில் வீழ்ந்தவர்களாவர். நிலைமை இவ்வாறிருக்கும் போது எவ்வாறு ஷீஆக்களும் குறிப்பாக ரா.ஃபிதீக்களும் அந்த முஹப்பத்தைக் கொண்டு பயன்பெற முடியாதவர்களாக இருக்க முடியும்? ஒருவேளை, நபியுடைய வாக்கு மூலமாக அந்தத் தீவிர முஹப்பத்திற்குள் சிறைப்பட்டவர்களாக இருக்கலாம் அல்லவா?

**பதில்:** முஹப்பத் இரண்டு பகுதிகளாகும். ஒன்று இயல்பொருள் அடிப்படையிலான நேசமாகும். அதாவது, ரஸூலே அக்ரம் அலைஹிஸ்ஸலாது வஸ்ஸலாம் அவர்களை முன்னிறுத்தி அல்லாஹ்வின் பெயரால் ஹழரத் அலி, ஹஸன், ஹுஸைன் மற்றும் ஆலுபைத்தை நேசிப்பதாகும். இந்த முஹப்பத் ரஸூலே அக்ரம் அலைஹிஸ்ஸலாது வஸ்ஸலாம் மீதான முஹப்பத்தை அதிகரிக்கச் செய்யும் அல்லாஹ் மீதான நேசத்திற்கு வஸீலாவாக அமையும். இந்த வகை முஹப்பத் ஆகுமாக்கப்பட்டதாகும். இதில் தீவிரத்தன்மை பாதிப்பை ஏற்படுத்தாது. அத்துமீறலாக ஆகாது. பிறரை அவமதித்துக் குரோதம் வளர்ப்பதற்கான தேவையையும் ஏற்படுத்தாது.

இரண்டாவது, பெயர்பொருள் அடிப்படையிலான நேசமாகும். அதாவது, நேரடியாக வஸ்த்தை நேசிப்பதாகும். அதாவது, ஹழரத் ரஸூலே அக்ரம் அலைஹிஸ்ஸலாதுவஸ்ஸலாம் அவர்களைப் பற்றிச் சிந்திக்காது, ஹழரத் அலியுடைய வீரதீரங்கள், உத்தமத்தன்மைகள் போன்ற சிறப்பம்சங்களையும் ஹழரத் ஹஸன், ஹுஸைனுடைய உச்சமட்ட சிறப்புக்களையும் நேசம் கொள்வதாகும். இப்படிப்பட்டவர்கள் அல்லாஹ்வை அறியாதவர்களாகத் தான் இருந்தாலும், நபியை சாராதவர்களாகத் தான் இருந்தாலும் மேற்போன்றோரை அவர்களது சிறப்புக்களுக்காக நேசிப்பார்கள். இந்த நேசமானது ரஸூலே அக்ரம் அலைஹிஸ்ஸலாது வஸ்ஸலாம் அவர்கள் மீதான முஹப்பத்திற்கோ, அல்லாஹ் மீதான முஹப்பத்திற்கோ காரணியாக அமையாது. அதேநேரம் இதில் ஏற்படும் தீவிரத்தன்மை பிறரை அவமதிப்பதற்கும் பிறர் மீது குரோதம் வளர்ப்பதற்கும் வழிவகுக்கும்.

ஆம், நபியுடைய வாக்கின்படி, ஹழரத் அலி மீதான மிதமிஞ்சிய முஹப்பத் காரணமாக, ஹழரத் அபூபக்கர் ஸித்தீக் மற்றும் ஹழரத் உமர் ஆகியோர் மீது காழ்ப்புணர்ச்சியைக் கக்கியதன் விளைவாக அழிவிற்குள் வீழ்ந்து விட்டனர். மேலும், இந்தப் பெயர்பொருள் அடிப்படையிலான சடரீதியான முஹப்பத் எப்போதுமே அழிவிற்கான காரணியாகும்.

## பதிநான்காவது மின்னல்

### முதலாவது அத்தியாயம்

## இரண்டாவது வினா: “அஹ்லுல் அபா”[26] சம்பந்தமானதாகும்.

எனது சகோதரனே, பதிலளிக்கபடாதிருந்த ஆலு அபா சம்பந்தமான உங்களது கேள்விக்கான பதிலாக, ஆலு அபா விடயத்திலிருக்கும் ஏராளமான தாத்பரியங்களுள் ஒன்று மாத்திரம் இங்கு விளக்கத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும். அதாவது, ரஸுலே அக்ரம் அலைஹிஸ்ஸலாது வஸ்ஸலாம் அவர்கள் தான் அணிந்த அருள்பாலிக்கப்பட்ட போர்வையை ஹழரத் அலி (ரழி), ஹழரத் ∴பாதிமா (ரழி), ஹழரத் ஹஸன் (ரழி) மற்றும் ஹழரத் ஹுஸைன் (ரழி) ஆகியோர் மீது போர்த்தியவர்களாக,[27] لِيُذْهِبَ عَنْكُمُ الرِّجْسَ اَهْلَ الْبَيْتِ وَيُطَهِّرَكُمْ تَطْهِيرًا என்ற மறை வசனத்தைக் கொண்டு துஆ செய்தமைக்குப்[28] பின்னால் இரகசியமான பல ஞானங்கள் பொதிந்துள்ளன. இங்கு அந்த இரகசியங்கள் சம்பந்தமான விளக்கத்தை தவிர்த்துக்கொள்கின்றோம். தனியாக ரிஸாலத் பணியோடு சம்பந்தப்படுகின்ற ஒரு தாத்பரியம் மாத்திரம் பின்வருமாறு:

ரஸுலே அக்ரம் அலைஹிஸ்ஸலாது வஸ்ஸலாம் அவர்கள் தனது மறைவையும், எதிர்காலத்தையும் அறிந்த நுபுவ்வத் பார்வையைக் கொண்டு முப்பது, நாற்பது வருடங்களுக்குப் பிறகு ஸஹாபாக்களுக்கும் தாபிஈன்களுக்கும் மத்தியில் மகத்தான பித்னாக்கள் தோன்றி இரத்தம் சிந்தப்படப்போகின்றது என்பதைக் கண்டு கொண்டுள்ளார்கள். அப்போது அவர்களுக்கு மத்தியில் மிகவும் உயர்வான ஆளுமைகள், தனது போர்வைக்குக் கீழ் இருந்த அந்த மூன்று ஆளுமைகளும் தான் என்பதையும் சான்று பகன்றுள்ளார்கள். எனவே, ஹழரத் அலி (ரழி) அவர்களை உம்மத்தின் பார்வையில் தூய்மைப்படுத்தி, அவர்களது பரிசுத்தத் தன்மையை பிரகடனப்படுத்துவதற்காகவும், ஹழரத் ஹுஸைன் (ரழி) அவர்களுக்கு ஆறுதலையும் அமைதியையும் அளிப்பதற்காகவும், ஹழரத் ஹஸன் (ரழி) அவர்களை வாழ்த்தி, அவர்கள் செய்துகொள்ள இருக்கும் ஓர் ஒப்பந்தத்தைக் கொண்டு உம்மத்தைச் சூழ்ந்து கொள்ள இருக்கும் பயங்கரமான ஒரு பித்னாவை அகற்றுவதன் மூலமாக, அவர்கள் பெற்றுக்கொள்ள இருக்கும் கண்ணியத்தையும் அவர்களால் உம்மத் அடைந்து கொள்ள இருக்கும் மகத்தான நன்மைகளையும் அறிவிப்புச் செய்வதற்காகவும், ஹழரத் ∴பாதிமா அவர்களின் சந்ததிகளுடைய பரிசுத்தத்தன்மை மற்றும் கண்ணியம் என்பவற்றைப் பிரகடனப்படுத்தி அஹ்லுல் பைத் என்ற உன்னதமான நாமத்திற்கு அவர்கள் அருகதையுள்ளவர்களாக ஆகப்போகின்றார்கள் என்பதை அத்தாட்சிப் படுத்துவதற்காகவும், அந்த நான்கு உத்தமர்களுக்கும் தன்னோடு இணைந்ததாக “ஆலு அபாவுக்குரிய ஐவர்” என்ற நாமத்தை ஈட்டிக் கொடுத்த அந்த அபாவைப் போர்த்தினார்கள்.

ஆம், அப்போது கிலாபத்தானது, உண்மையிலேயே ஹழரத் அலி (ரழி) அவர்களுக்கு வர வேண்டியதாக இருந்தது. ஆனால், சிந்தப்பட்ட இரத்தங்கள் மிகவும் மகத்துவமிக்கவையாக இருந்தமையால் உம்மத்துடைய தப்பெண்ணத்தை விட்டும் ஹழரத் அலி (ரழி) அவர்களைப் பாதுகாத்து அவர்களது பரிசுத்தத்தன்மையைப் பிரகடனப்படுத்துவது - ரிஸாலத் பணியின் அடிப்படையில் அவர்கள் ஆற்றப்போகும் பணிகளின் மகத்துவத்தின் காரணமாக- மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக இருந்தது. எனவேதான் ரஸுலே அக்ரம் அலைஹிஸ்ஸலாது வஸ்ஸலாம் அவர்கள் அவ்வாறான ஒரு அணுகுமுறையைக் கைக்கொண்டு அவர்களைப் பரிசுத்தப் படுத்தினார்கள். அவர்களை விமர்சித்து, பொய்ப்பித்து, வழிகேட்டில் வீழ்ந்து விட்டதாகக் கொக்கரிக்கும் கவாரிஜ்களினதும், உமையாக்களுள் ஒரு பகுதி

---

[26]: நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள், தான் அணிந்த போர்வையை ஹழரத் அலி, ஹழரத் ∴பாதிமா, ஹழரத் ஹஸன் மற்றும் ஹழரத் ஹுஸைன் (ரழியல்லாஹு அன்ஹும்) ஆகியோரின் மீது போர்த்தியவர்களாக துஆ செய்தார்கள். இந்த சம்பவத்தின் பின்னர் நபி (ஸல்) அவர்கள் உட்பட மேற்படி நால்வருக்குமாக வழங்கப்பட்ட நாமமே “ஆஹ்லுல் அபா” என்பதாகும்.

[27]: அல்அஹ்ஸாப், 33

[28]: முஸ்லிம், ∴பழாஇலுஸ்-ஸஹாபா: 61 திர்மிதி, மனாகிப்: 60 முஸ்னத், 1: 130, 4:107, 6:292, 296, 298, 304

அக்கிரமக்காரர்களினதும் வாயை அடைத்தார்கள். ஆம், கவாரிஜ்களும் உமையாக்களுடைய ஒரு பகுதி அக்கிரமக்கார ஆதரவாளர்களும் ஹழரத் அலி (ரழி) அவர்களைப் பொய்ப்பித்து வழிகேட்டுப் பட்டம் சூட்டியமை மற்றும் ஹழரத் ஹுஸைன் (ரழி) அவர்கள் சந்தித்த மிகவும் வக்கிரமான நெஞ்சை நெகிழ வைக்கும் சம்பவத்தைத் தொடர்ந்து ஷீஆக்களுடைய அதி தீவிரப் போக்கு, பித்அத்துக்களில் காட்டிய தீவிர நாட்டம் மற்றும் ஷைஹைன்களை விட்டும் முகத்தைத் திருப்பிக்கொண்டமை என்பன, இஸ்லாத்தின் குடைக்குக் கீழ் உள்ளவர்களுக்கு மிகவுமே பாதிப்பை ஏற்படுத்தி விட்டன.

ஆம், ரஸூலே அக்ரம் அலைஹிஸ்ஸலாது வஸ்ஸலாம் அவர்கள், அந்தப் போர்வையைக் கொண்டும் துஆவைக் கொண்டும், ஹழரத் அலி (ரழி), ஹழரத் ஹுஸைன் (ரழி) ஆகியோரை அந்த அனர்த்தங்களுக்கான பொறுப்பு மற்றும் குற்றச்சாட்டுக்களிலிருந்து பாதுகாத்ததைப் போன்றே, தனது உம்மத்தினர் அவர்கள் மீது தப்பெண்ணம் கொள்வதை விட்டும் பாதுகாத்தார்கள். அதேபோன்றே ஹழரத் ஹஸன் (ரழி) அவர்களை -அவர்கள் செய்த ஒப்பந்தத்தின் மூலமாக உம்மத்திற்குச் செய்த புண்ணியத்தை- ரிஸாலத் பணிக்கான அவர்களது தொண்டை அடிப்படையாக வைத்து வாழ்த்துகின்றார்கள். மேலும், ஹழரத் ∴பாத்திமா அவர்களுடைய பரம்பரையிலிருந்து வரும் அருள்பாலிக்கப்பட்ட சந்ததிகள், முஸ்லிம் உலகில் அஹ்லுல் பைத் நாமத்தைப் பெற்றவர்களாக உன்னதமானதொரு கண்ணியத்தை ஈட்டிக்கொள்ளப் போகின்றார்கள் என்பதையும், ஹழரத் ∴பாத்திமா (ரழி) அவர்களும்[29] وَ اِنِّیٓ اُعِیذُهَا بِكَ وَذُرِّيَّتَهَا مِنَ الشَّيْطَانِ الرَّجِيمِ என்று இறைஞ்சிய ஹழரத் மர்யமுடைய தாயைப் போன்று தனது சந்ததிகளின் மூலமாக மிகவும் கண்ணியம் அடையப் போகின்றார்கள் என்பதையும் அறிவிப்புச் செய்கின்றார்கள்.

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلٰى آلِهِ الطَّيِّبِينَ الطَّاهِرِينَ الْاَبْرَارِ وَعَلٰى اَصْحَابِهِ الْمُجَاهِدِينَ الْمُكْرَمِينَ الْاَخْيَارِ آمِينَ

[29]: ஆலுஇம்ரான், 36